The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. } அக்டோபர் 1918. { இலக்கம் 10.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

பரிசுத்த திரித்துவத்தின் பரம இரகசியம் பழய ஏற்பாட்டுக் காலத்தில் அவ்வளவு வெளிப்படையாய் வெளியாக்கப்படாவிடினும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யாதோர் சந்தேகத்துக்குமிடமின்றிமிகத்தெளிவாய் அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆம், நமதாண்டவரான சேசுநாதசுவாமி தாமே இப்பிரபஞ்சத்திலிருந்தகாலத்தில் அதைத் தெளிவாயும் தேட்டையர்யும் தெரியச் செய்திருக்கின்றார். இதற்குச் சுவிசேஷமே மறுக்கப்படாத அத்தாட்சி. அதில் நமது கர்த்தர் மனிதர்களையும் இன்னுமற்ற வஸ்துக்களையும் ஆசீர்வதித்திருப்பதாக நாம் காண்கிறோம். அவர் சில அப்பங்களையும் மச்சங்களையும் இரு பரியாயங்களில் ஆசீர்வதித்து அவைகளை ஆச்சரியத்துக்குரிய விதமாய்ப் பலுகச் செய்திருக்கின்றார். அவர் தம்முடைய சீஷர்களுடன் கடைசி விசையாக இராப்போசனம் செய்தபோது, அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதித்து, அவைகளைத் தம்முடைய திருச்சரீரமாகவும் இரத்தமாகவு மாறறியிருக்கின்றார். தம்மண்டைக்குக்கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை யாசீர்வதித்ததுமன்றி, தாம் பரலோகத்துக்கு ஆரோகணமாவதற்கு முந்தி தம்முடைய சீஷர்களையும் ஆசீர்வதித்திருக்கின்றார். இவ்வாறு அவர் ஆசீர்வதித்தபோதெல்லாம் பரம திரித்துவத்தின்பேராலேயே ஆசீர்வதித்தார். அதாவது: தம்மை ஜனிப்பித்தவரும் தம்மை இவ்வுலகத்துக் கனுப்பினவருமான பிதாவின் நாமத்தினாலேயும், தேவ குமாரனும் உலக இரட்சகருமான தம்முடைய நாமத்தினாலேயும், பிதாவினிடத்திலிருந்தும் சுதனிடத்திலிருந்தும் புறப்படுகிறவரும் மனுக்குலத்தை பரிசுத்தப்படுத்தும்பொருட்டு இப்பூலோகத்திலிறங்கி வந்தவருமான இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்தினாலேயுமே ஆசீர்வதித்தாரென்பதற் கையமில்லை.

*
* *

அப்போஸ்தலர்களும் தங்களுடைய உபாத்தியாயராகிய நமதாண்டவரைப் பின்பற்றி, அர்ச். திரித்துவத்தின் திரி ஆட்களாகிய பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து

வின் திரு நாமத்தினாலேயே, தாங்கள் ஆசீர்வதித்தவைகளையெல்லாம் ஆசீர்வதித்தார்கள். தலைமை அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர் தாமெழுதின முதல் நிருபத்தை அர்ச். திரித்துவத்தின் திரு நாமத்தினாலேயே பின்வருமாறு தொடங்கியுள்ளார்:—சேசுக்கிறீஸ்துநாதருடைய அப்போஸ்தலனாகிய இராயப்பன் பொந்து கலாத்தியா, கப்பதோசியா, ஆசியா, பித்தினியா தேசங்களில் பரதேசிகளாய்ச் சிதருண்டு, பிதாவாகிய சர்வேசுரனுடைய முன்னறிவின்படிக்கு இஸ்பிரீத்துசாந்துவின் பரிசுத்தத்தனத்துக்குங் கீழ்ப்படிதலுக்கும், சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தத்தெளித்தலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இஷ்டப்பிரசாதமுஞ் சமாதானமுமுண்டாவதாக. அர்ச். சின்னப்பரும் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தை பரம திரித்துவத்தின் பரிசுத்த நாமத்தினாலேயே பின்வருமாறு முடிக்கிறார்:—நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய இஷ்டப்பிரசாதமும் பிதாவினுடைய சிநேகமும் இஸ்பிரீத்துசாந்துவினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடும் இருக்கக்கடவது,—ஆமென்சேசு.

* * *

பரிசுத்த தாயாகிய சத்திய திருச்சபை அர்ச்சிப்பதெதையும் அர்ச். திரித்துவத்தின் திருநாமத்தினாலேயே அர்ச்சிக்கின்றது. மேலும் திருச்சபைமேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்குங் கொடுத்திருக்கிற அதிகாரம், வல்லமை, அநுமதி இவைகளைக்கொண்டு, அவர்களும் பலவற்றை மந்திரிக்கிறார்கள். தேவாலயங்களும், பலிப்பீடங்களும், சுரூபங்களும், பூசை வஸ்திரங்களும், மணிகளும், தேவ பணிவிடைக்கு வேண்டிய இன்னுமற்றவைகளும் அவர்களால் மந்திரிக்கப்படுகின்றன. கத்தோலிக்கு அரசர்களும், சக்ரவர்த்திகளும் அவர்களாலே அபிஷேகஞ் செய்யப்படுகிறார்கள். வீடு வாசல்களும், தோட்டந் துரவுகளும், நில புலங்களும், காய்கனிகளும், தானிய தவசங்களும், ஆடுமாடுகளும் இவைபோன்ற இன்னுமநேகமும் அவர்களால் ஆசீர்வதிக்கப்படுகின்றன. இவ்வாறு இவர்கள் அவைகளை ஆசீர்வதிக்கையில், திரித்துவத்தின் மூன்றாட்களினுடைய பெயரையும் ஸ்பஷ்டமாய் உச்சரித்து ஆசீர்வதிக்கிறார்கள். அல்லாமலும் எத்தனையோ பக்தியுள்ள கிறீஸ்துவர்கள் "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே ஆமென்சேசு" வென்று சொல்லி, தங்கள்பேரில் சிலுவை வரைந்துகொள்வதுமல்லாமல், தங்கள் பிள்ளைகள்பேரிலும் சிலுவை வரைகிறார்கள். இன்னும் அநேக கிறீஸ்துவர்கள் "என்னைச் சிருஷ்டித்த பிதாவாகிய சர்வேசுரா, என்னை இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா, என்னை அர்ச்சித்த இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா, என்னை ஆசீர்வதியுங்க" ளென்று காலையிலும் மாலையிலுஞ் சொல்லி, திரித்துவ ஏக சர்வேசுரன்பேரால் தங்கள்மேல் சிலுவை வரைந்துகொள்ள வழக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி திருச்சபை கிறீஸ்துவர்களுக்குள் ஏற்படுத்தியுள்ள பக்தி நிறைந்த வழக்கப் பழக்கங்களினாலும், தான் நடத்திவரும் பரிசுத்த சாங்கிய சடங்குகளினாலும் பரம இரகசியங்களுக்குள் மகா பெரிய பரம இரகசியமாகிய பரம திரித்துவத்தைப் புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாய்ப் போதித்து வருகின்றதென்றறியக் கடவோமாக.

SISTER MARY ASSUNTA.

மரி அசுன்தா சகோதரி.

(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.

(முன் தொடர்ச்சி.)

அசுன்தா சகோதரியின் கடைசி நேரத்தைப்பற்றி அவள் மரித்த பிறகு அவளுடைய சிரேஷ்ட தாயார் எழுதிய ஒரு கடிதத்திலிருந்து பின்வரும் விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன:—

"மரி அசுன்தா சகோதரி பேசக்கூடாத ஸ்திதியிலிருந்தாலும் தன் சுய உணர்ச்சியையும் முழு அறிவையுமுடையவளாயிருந்தாள். நாங்க

ளனைவரும் அவளுடைய படுக்கையைச் சுற்றி யிருந்ததைப் பார்க்கச் சந்தோஷிப்பவள்போல் காணப்பட்டாலும் மிக்க வாதனைப்பட்டுக்கொண்டிருந்தாள். குளிர்ந்த வெயர்வை அவள் முக முழுமையும் வடிந்தது. அவளுடைய சரீரம் அப்பொழுதே அழிவுற்றுப்போவதுபோல் தோன்றிற்று. விடிகிறதற்கு முந்தியே அவளுக்கு அதிக ஆயாசமுண்டாகிவிட்டது. அவளுக்கு அவஸ்தை தருணம் நெருங்கிற்றென்று நாங்கள் அனைவரும் நினைக்கலானோம்; ஆனால் பொழுது விடியவே அவளுடைய சோகம் தெளிந்தது. அவள் பேசுவதற்கு பிரயாசைபட்டபோதிலும் அவளுக்கு நாயெழவில்லை. தலையணையின்மேலிருந்த தன் தலையை விசனத்தோடு அசைத்தாள். பிறகு ஆறுதலடைந்து முகக்களையோடு தன் பார்வையை ஒரே நோக்கமாய் மேலே உயர்த்தினாள். அவளுடைய முகம் அமரிக்கையுள்ளதாயும் கலக்கமற்றதாயும் சற்று புன்னகையோடு தோன்றிற்று. மாலை $5\frac{1}{2}$-மணிக்கு அவஸ்தைப்பட ஆரம்பித்தாள். சகோதரிகள் அனைவரும், சில சீன கன்னியரும் அவளைச் சுற்றிலுமிருக்க, மிஷனரி குருவானவர் அவஸ்தைப்படுகிறவர்களுக்காகச் சொல்லப்படும் செபங்களைச் செபிக்க ஆரம்பித்தார். அதே நேரத்தில் நான் திரும்பி சுற்றிலும் பார்த்தேன். ஓ! என்ன திவ்யமான மதுரம் நிறைந்த இரஞ்சித மணம் அறையெங்கும் வீசிக்கொண்டிருந்தது! பரிமள தைலம், தூபவர்க்கம் இவைகளால் உண்டான நறுமணம் போலும், ரோசா மலர்களினின்றும், பலவிதமான மதுர புஷ்பங்களினின்றும் கிளம்பின சுகந்த வாசம்போலும் இருந்தது அம்மணம். அறையிலும் வீட்டிலெங்கும் இத்திவ்ய மணமே நிரம்பியிருந்தது. குரு சுவாமியாராவது இதர மனுஷராவது வாசனைப்பொடியை அல்லது பன்னீரைத் தெளித்திருக்கக்கூடுமென்று நான் முதலில் நினைத்தேன். ஆனால் எவரும் இதைச் செய்யவில்லை. வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் இதைப்பற்றி வினவினோம். ஒருவரும் இதற்குச் சரியான விவரம் சொல்லவில்லை. இந்த அதிசயமான சுகந்த வாசனை எங்கிருந்து வந்திருக்கக்கூடும்! நாங்கள் மிகவும் கலக்கமுற்று அதிசய பிரமிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தோம். நாங்கள் எல்லோரும் ஒரே சிந்தனையாய் ஒரே வாய்மொழியாய் "வானுலகிலிருந்துதான் இச்சுகந்த வாசனை வந்திருக்க வேணுமென்று கூறினோம்." மறுபடியும் நாங்கள் அசுன்தா சகோதரியை நோக்கினபோது, அவள் அமரிக்கையாய்த் தன் கடைசி மூச்சை விட்டாள். அவள் மரணமானபின் இந்த அதிசயமான பரிமளம் திடீரென நீங்கினது. ஆயினும், அது மரித்த சகோதரியின் அறையிலும் வீட்டிலெங்கும் மறுபடியும் வீசிற்று.

இவ்வளவு புண்ணியவதியான அன்பார்ந்த சகோதரியின் மரணம், கன்னியரை ஆழ்ந்த துக்கத்தில் அமிழ்த்தாமல், எல்லோரும் சுகிக்கும்படியான ஓர்வித சந்தோஷத்தை அவர்களுக்குக் கொண்டுவந்தாற்போல் தோன்றினது. இது எங்கிருந்துவந்ததென்று ஒருவரும் சொல்லக்கூடுமாயில்லை. ஒருவரும் துயரப்படவில்லை. இச்செய்தி அநாத பிள்ளைகள் மடத்திலும் அவ்வூர் கிறீஸ்துவர்களுக்குள்ளும் பரவினதும் எல்லோரும் ஒரு பெரிய திருநாளைப்போல் கொண்டாட்டஞ் செய்ய ஆரம்பித்தார்கள். மறுநாள் ஜனங்கள் திரள் திரளாய் எங்கள் வீட்டை முற்றுகைபோட்டதுபோல் சூழ்ந்துகொண்டார்கள். அதில் இன்னும் சுகந்த பரிமளம் கமகமவென்று வீசிக்கொண்டேயிருந்தது.

சீனருடைய சந்தோஷ உல்லாசத்திற்குக் கங்குகரையில்லை. நாங்கள் பிரேதத்தை வளர்த்திவைத்திருக்கையில், அதற்கு அவர்கள் காண்பித்த ஆசார வணக்கத்தை வருணிக்கமுடியாது. அவர்கள் அறைக்குள் பிரவேசிப்பதற்குமுன் சிலுவை வரைந்துகொண்டு பக்தியாய் முழந்தாட்படியிடுவார்கள். சவம் அடக்கஞ்செய்யும் சடங்கு மெய்யாகவே மெத்த சிறப்பு வைபவத்துடன் நடைபெற்றது. சீன ஜனங்கள் ஆண் பெண் அடங்கலும், அவர்களுக்குள் அநேகர் வெகு தொலைதூரத்தினின்றும், நமது புண்ணியவதியின் அடக்கத்துக்கு வந்திருந்தார்கள்.

அழுகையுடன் நாங்கள் மடத்துக்குத் திரும்பிவந்தபோது, சர்வேசுரன் எங்களுக்கு இன்னும் ஓர் ஆறுதலைத் தயாரித்திருந்ததாகக் கண்டோம். வீடெங்கும் இன்னும் அந்த சுகந்த மணம் பரவியிருந்தது. ஆனால் இப்போது அது முன்னிலும் அதிக வாசனையுள்ளதாயும், அதிக நேரம் நீளித்ததாயுமிருந்தது. மறுநாள் சாயரக்ஷைவரையில் அவ்வாசனை நீங்கவில்லை. நம தாண்டவருடைய நேச பட்சம் எவ்வளவோ பெரிது! இத்தனை துன்பங்களால் வாதிக்கப்பட்ட எங்கள் இருதயங்களை அவர் எவ்வளவு அருமையாய் ஆற்றித் தேற்றுகிறார். அவருக்

காகமாத்திரம் சேவித்துவந்த ஓர் துறவியின் மரணம் எவ்வளவோ இன்பத்துக்குரியதாயிருக்கிறது!

எட்டு வருஷகாலமாய் அசுன்தா சகோதரியின் ஞாபகம், அவளை அறிந்து அவளை நேசித்துவந்தவர்களின் இருதயங்களில் எவ்வளவோ பூஜிதவணக்கமாயும் பரிசுத்தமாயும் இருந்துவந்தது. முக்கியமாய்ச் சீன தேசத்தில் அவளை பக்தி நேசத்துடன் கொண்டாடிவந்தார்கள். அவளை மன்ருடுவதினுல் கிடைக்கலான நன்மைகளும் உபகாரங்களும் அவளுடைய அர்ச்சியசிஷ்டதனத்தின்மட்டில் ஜனங்களுக்கு இருந்த மதிப்பையும் விசுவாசத்தையும் பதின்மடங்கு அதிகரிக்கச் செய்தது. 1913-ம் வருஷத்தின் வசந்த காலத்தில் டங்கெயுல்கெயு ஊரின் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த சவங்களை டையுயியென்பூ என்னும் ஊர் கல்லறைக்குக் கொண்டுவந்து அதில் அடக்கஞ் செய்யவேண்டுமென்று உத்தரவு பிறந்தபோது, அசுன்தா சகோதரியின் சவப்பெட்டியை திறக்கவும், அதிலுள்ள பிரேதத்தைப் பரிசோதனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. டங்கெயுல்கெயுவிலுள்ள மடத்தின் கன்னியரும், சீன கன்னியரும், அவ்வூர் கிறீஸ்துவர்களும், எப்ரல் மாதம் 29-ம் தேதி சுற்றுப்பிரகாரமாய்க் கல்லறைக்குச் சென்றபோது, குழி திறக்கப்பட்டது. சில நிமிஷங்களுக்குப்பின் மிஷனரி குருக்கள் அவ்விடம் வந்தார்கள். வுகொலீனே (Ugolino) சுவாமியார் திருச்சபையின் செபங்களை வாசித்து, கல்லறையை மந்திரித்தவுடன், வேலையாட்கள் மண்ணைத் தோண்டிஞர்கள். சவப்பெட்டி வெளிக்குக் காணப்பட்டபோது அது நல்ல ஸ்திதியிலிருந்ததாகத் தோன்றினும், உடனே அதன் மூடி உடைந்து தூளாய்ப்போய்விட்டது. ஆட்கள் மெத்த சாக்கிரதையாய்ப் பலகைகளை நாலா பக்கமும் வைத்தார்கள். அவைகளை ஸ்திரமாய் இணைத்துவைத்ததினுல் குழியினின்று சவப்பெட்டியைக் கிளப்பி வெளியே கொண்டுவரக்கூடுமாயிருந்தது.

வுகொலீனே சுவாமியார் மூடியை நீக்கவே, எட்டு வருடங்களுக்குமுன் அசுன்தா சகோதரி சவப்பெட்டியில் எப்படி வைக்கப்பட்டாளோ அப்படியே யாதொரு மாறுதலில்லாமலிருக்கக் காணப்பட்டாள். அவளுக்கு உடுத்தியிருந்த உடை தூளியாய்ப்போயிருந்தபோதிலும், அவளுடைய சடலம் கொஞ்சமும் அழிவின்றி காப்பாற்றப்பட்டிருந்தது. கல்லறை மெத்த ஈரமுள்ளதாயிருந்தாலும் அதினின்று துர்நாற்றம் கிளம்பவில்லை. சரீரத்தின் தோல் அழியவேயில்லை; தோற்பத்திரம் (Parchment) போலும் அதனைத்தொட்டால் மிருதுவாயுமிருந்தது. காற்றுப்பட்டவுடன் சவப்பெட்டி பொடிப்பொடியாய் உதிர்ந்துபோனபோதிலும், சரீரத்தில் மாத்திரம் யாதொரு வேறுபாடும் உண்டாகவில்லை. பழய பெட்டியிலிருந்து பிரேதத்தைப் புதுப் பெட்டியில்வைத்து அதனை டையுயியென்பூ சமாதிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று மேற்றிராணியர் கட்டளையிட்டார். அப்படியே கொண்டுபோகப்பட்டு, மே மாதம் 2-ம் தேதி அவ்விடத்திய கல்லறைக்கோவிலில் சவம் ஸ்தாபிக்கப்பட்டது. மேற்றிராணியாரும், குருக்கள் இருவரும், ஒரு டாக்டரும், சவத்தைப் பரிசோதித்துப் பார்க்கவந்தார்கள். சரீரம் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டிருந்ததானது, ஓர் இயற்கைக்காரியத்தினுலுண்டானதல்லவென்று தனக்குள் கண்டுகொண்ட டாக்டர், இன்னும் ஒருவிசை அதை அதிக நுணுநுணுக்கமாய் ஆராய்ச்சி செய்வதாகச் சொன்னுர். டங்கெயுல்கெயு ஊரில் மடம் ஸ்தாபகமான காலந்தொட்டு சிரேஷ்ட தாயாராயிருந்த சிம்போரியென் (Symphorien) தாயார் இதன் சம்மந்தமா யெழுதிய கடிதத்திலிருந்து பின்வரும் சிலவற்றை இங்கு எடுத்துக் கூறுகிறேம்:—

"அசுன்தா சகோதரியின் சரீரத்தைக் கழுவவும், புதிய உடைகளை அவளுக்கு உடுத்தவும் லூசியானு தாயாரோடு நாங்கள் கல்லறைக்குப் போயிருந்தோம். ஜியாசின்தோ சுவாமியாரும் டாக்டரும் அங்கு வந்திருந்தார்கள். சரீரம் அழியாமல் நன்ருயிருந்தது. அதைத் திருப்பி திருப்பி புரட்டியும் அது நசுங்கவில்லை. புது உடுப்பையும், பட்டால் செய்த ஒரு உத்தரியத்தையும் அதற்கு உடுத்தினேம். ஏனெனில் கம்பளி உடை வெகு துரிதமாய் நைந்துபோகும்.

"புகைப்படம் பிடிக்கிறதற்காக அச்சரீரத்தை நிற்கிற பாவனையாக அமைத்தோம். ஒரு சுவற்றில் அதைச் சற்று சாய்ந்தவண்ணமாய் வைக்க, அது அப்படியே நின்றது. அது காப்பாற்றப்பட்ட ஆச்சரியத்துக்குரிய வகையை இன்னும் தீர்க்கமாய் அறிந்துகொள்வதற்காக டாக்டர் இவ்வாராய்ச்சியைச் செய்ய விரும்பினுர்.

அசுன்தா சகோதரியின் வணக்கத்துக்குரிய சரீரம் துத்தநாகத் தகட்டால் செய்யப்பட்ட அலங்கிர்தமான இரட்டைச் சவப்பெட்டியில் வைக்கப்பட்டு, கல்லறைக் கோவிலில் வெளியரங்கமாய் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது.

மேமீ 21-ந் தேதி 1913ஞ.

"மே மாதம் 17-ம் தேதி அர்ச். பாஸ்கால் பையிலோன் என்பவரின் திருநாளன்று அதி காலையில் நாங்கள் கல்லறைக் கோவிலுக்குச் சென்றோம். அப்போது மேற்றிராணியார் நடந்த காரியாதிகளைப்பற்றிய வாக்குமூலங்களை வாங்கினார். மேற்றிராணியாரும், பங்கு சுவாமியாரும், ரிக்சி சுவாமியாரும், லிகிதரும், குரு மடத்து வித்தியார்த்திகளும், இன்னும் பெருங் கூட்டமாய் சுதேச கிறீஸ்துவர்களும் அங்கு வந்திருந்தார்கள். சவப்பெட்டியிலிருந்து அசுன்தா சகோதரியின் சரீரம் எடுக்கப்பட்டு, ஒரு மேசையின்மேல் வளர்த்தப்பட்டிருந்தது. குரு மடத்து வித்தியார்த்திகளில் ஒருவர் (Libera) லிபெரா என்னும் பாடலை ஆரம்பித்தபின் மேற்றிராணியார் மந்திரித்தார். பின்பு சாக்ஷிகளின் விசாரணைத் தொடங்கிற்று. லூசியானா தாயாரையும் என்னையும் கூப்பிட்டு விசாரித்தபோது, எங்கள் மடத்தில் வார்த்தைப்பாடு கொடுத்த மரி அசுன்தா சகோதரியின் உண்மையான பிரேதம் அதுதானென்று சுவிசேஷ புஸ்தகங்களின்மேல் ஆணையிட்டுச் சத்தியஞ் செய்தோம். அச்சத்தியத்துக்கு நாங்களிருவரும் கையொப்பமிட்டோம். வணக்கத்துக்குரிய சரீரம் திரும்பவும் சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. ஒரு வேலையாள் துத்தநாகத் தகட்டால் செய்யப்பட்ட அதன் மூடியை எடுத்து பெட்டியின் வாயிலை மூடி பிகுத்தஞ் செய்தான். முகத்துக்கு நேராக அந்த மூடியில் ஓர் திறப்பிருந்தது. அத்திறப்பு கண்ணாடியால் மூடப்பட்டிருந்தது. இன்னும் வேறொரு மூடியால் அது மூடப்பட்டது. தலைமாட்டில் ஒன்றும், கால்மாட்டில் ஒன்றுமாக இரண்டு பூட்டுகள் போடப்பட்டன. அச்சவப்பெட்டி வெள்ளைக் கச்சையால் இறுகக் கட்டப்பட்டு மேற்றிராணியாருடைய முத்திரையிடப்பட்டது.

"ரிக்சி சுவாமியார் வாங்கின வாக்குமூலங்களுக்கு மேற்றிராணியாரும் குருக்களும் கையொப்பமிட்டார்கள். கல்லறைக் குழியில் உடனே பிரேதங் கொண்டுபோய் வைக்கப்பட்டு எல்லோருக்கும் முன்னிலையில் மண்ணால் மூடப்பட்டது. அப்போது மத்தியான வேளை. காலை 9-மணிக்கு இச்சடங்கு ஆரம்பமானது. மரி அசுன்தா சகோதரியின்மட்டில் சீனர் மெத்த உற்சாகமுள்ள மதிப்பும் பற்றுதலும்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவளிடம் சகலமான நன்மைகளையும் பெற்றுவருகிறார்கள். கிறீஸ்துவர்களைப்போல் அஞ்ஞானிகளும் விசுவாசத்தோடு அவளுடைய உபகாரசகாயங்களைப் பெறவருகிறார்கள்."

முற்கூறியபடி டாக்டர் பிரான்சீஸ்கோ பியான்கேரி (Francis Biancheri) அசுன்தா சகோதரியின் சரீரமிருந்த நிலைமையை யோசிக்க யோசிக்க மெத்த பிரமிப்படைந்து, அதைத் தாமே தனியாய் ஆர அமர ஆராய்ச்சிசெய்ய தனக்கு உத்தரவு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவ்வராய்ச்சியின் முடிவை அவர் சொன்னபடியே இங்கு எடுத்துக்கூறுவோம்.

"மடத்துக்கு வருவதற்கு முந்தி பல்லோத்தா அசுன்தா என்று அழைக்கப்பட்ட மரி அசுன்தா சகோதரி 20-நாள் வியாதியாய்க் கிடந்து டங்கேயுல்கெயு என்னும் ஊரில் 1905-ம் வருஷம் எப்ரல் மாதம் 7-ம் தேதி காலஞ் சென்றாள். மடத்தில் உண்டான ஓர்வித கொடிய டைபஸ் என்னும் விஷஜுரத்திற்கு அவள் இரையானாளென்று சொல்ல யாதொரு சந்தேகமுமில்லை. அம்மடத்தில் வேற் மூன்று கன்னியரும் அதற்குப் பலியானார்கள். மரித்தவர்களின் சரீரம் அழியத்தொடங்கும்போதே, தேகக்கட்டுகளும் குலைந்து அது உருமாறிப்போகும். அசுன்தாவுக்குண்டான மரணம் குடலைப்பற்றிய ஒரு தொற்று வியாதியினின்று சம்பவித்ததினால், அவளுடைய சரீரம் அதி விரைவாய் அழுகிப் போகவேண்டியதாயிருந்தது.

"1905-ம் வருஷம் எப்ரல் மாதம் 8-ம் தேதி அவளை அடக்கஞ் செய்தார்கள். சீனருடைய வழக்கத்தை யொட்டி அவளுடைய சரீரம் 1½-அங்குல கனமுள்ள பலகைகளினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. காற்று புகாவண்ணம் அப்பெட்டி மூடப்படவில்லை. ஏனெனில் சீன தச்சர் சாதாரண ஆணிகளையாவது முறுக்காணிகளையாவது உபயோகிப்பதே கிடையாது.

"அவர்களுடைய வேலை மிகவும் திறமையானதென்றாலும், பரும்படியான ஆயுதங்களை அவர்கள் கையாடுவதினால், அவர்கள் பலகைகளை யிணைக்கும் விதம் அவ்வளவு செவ்வையானதல்ல. கல்லறையை மண்ணால் மூடிவிட்டு

அதன்மேல் செங்கல்களை வரிசையாய் அடுக்கு வார்களேயன்றி, அவைகளை சுண்ணும்பு அல்லது சிமிட்டி சாந்தால் இணைக்கமாட்டார்கள். ஆகையால் அதனுள் தண்ணீர் சுலபமாய் இறங்கக் கூடியதாயிருந்தது. நாளது 1913ஞு எப்ரல்மீ 23-ம் தேதியில்தான் இப்பிரேதம் மறுபடியும் வெளியில் எடுக்கப்பட்டு அதே மாதத்தில் 29உ டையியுயென்பூ என்னும் ஊரிலுள்ள கத்தோலிக்கு கல்லறை கோவிலுக்குக் கொண்டு போய் வைக்கப்பட்டது. மே மாதம் 2-ம் தேதி சவப்பெட்டியையும் அதினுள் வைக்கப்பட்ட சரீரத்தையும் நான் நுணுக்கமாகப் பரிசோதித்தேன். அதின் உண்மையான விவரம் பின்வருமாறு :—

"சவப்பெட்டியின் அடித்தட்டு புழுக்களாலும் ஈரத்தாலும் ஏறக்குறைய முழுதுமே கெட்டுப்போயிருந்தது. இதுபோலவே சவப்பெட்டியின் பலகைகள் உட்புறத்திலும் கெட்டுப்போயிருந்தன. சரீரமாத்திரம் அழியாமல் சிரசு இடது தோள் பக்கமாய் சாய்ந்தபடியிருந்தது. உயிரோடிருக்கும்போது இதுவே அவளுடைய இயல்பான நிலைமை. முகத்தின் நிறம் பழய தந்தத்தை அல்லது பழய தோற் பத்திரத்தைப்போன்ற இருண்ட மஞ்சள் நிறமானதாயும் மிருதுவானதாயுமிருந்தது. கூந்தல் நிறம் தன் சுய நிறத்தையேகொண்டிருந்தது. கண்ணிதழ்கள் நன்ருய் மூடியிருந்தன. மூக்கும் செவிகளும் தத்தம் சுபாப நிலைமையில் நன்ருயிருந்தன. உதடுகள் சற்றும் அழியாமல் சிறிது திறந்தவண்ணமாயிருந்ததோடு அதன் வழியாய் வெண்மையான பற்கள் ஈறுகளுக்கிடையில் வரிசையாய் இணைக்கப்பட்டு ஒன்றையொன்று நெருங்கியிருக்கிறதாகக் காணப்பட்டன. முகத்தின் தசைகள் சுருங்கியிருந்தாலும், சரியான பரிமாணமுள்ளதாயும், சுபாப தோற்றமுள்ளதாயுமிருந்தது. எலும்புகளின் மூட்டுகள் உறுதியாயிருந்தன. ஆனபடியால் அஸ்திபந்தனங்களும் சரியான நிலைமையிலிருந்தன.

"டங்கெயுல்கெயுவிலிருந்து, டைய்யியென்பூவரையில் செய்த பிரயாணம் அச்சரீரத்துக்கு எவ்வித கெடுதியையும் உண்டாக்கவில்லை. ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருந்த சிரசை சிறுகச் சிறுக தன் சுய நிலைமையில்வந்து அமையும்படியாகச் செய்தோம். செபிக்கிற பாவனையாக கரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. கைவிரல்களிலும் கால் விரல்களிலும் நகங்கள் சரியாயிருந்தன. துருப்பிடித்தும், புழுக்களால் அரிக்கப்பட்டும் இருந்த ஜெபமாலை கைகளில் சுற்றப்பட்டிருந்தது. பாடுபட்ட சுரூபமும் கறைபிடித்த சில சிறிய சுரூபங்களும் கழுத்தைச் சுற்றிலும் தொங்கின. விஷயங்களைப் பூரணமாய் விசாரித்து அறிந்து கொள்ள டங்கெயுல்கெயுவின் கல்லறைத்தோட்டத்துக்கு நான் நேரே போனேன். இக்கல்லறைத் தோட்டம் சேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய மண்ணின் குணமும் சுபாவமும் சீனுவின் வடபாகங்களில் சாதாரணமாய்க் கிடைக்கும் மண்ணைப்போன்றது. அதன் நிறம் சற்று மங்கலான பொன் நிறத்தைபோன்றது. கல்லறையின் மேற்புறத்தில் வீட்டு வேலைகளுக்கும் நீர் பாய்ச்சலுக்கும் உபயோகமான நீரூற்றுகள் உண்டு. நான் நேரில்போய் கண்ணுரக் கண்டு பரிசோதனை செய்ததில், உண்மையாயும் திட்டமாயும் நான் கொண்ட அபிப்பிராயம் என்னவென்ருல், நான் புதுமையாய்க் காப்பாற்றப்பட்ட ஒரு பிரேதத்தின் முன்னிலையில் இருக்கிறேன் என்பதே. முற்கூறிய என்னுடைய அபிப்பிராயங்கள் இதர மனுஷருடைய கருத்துகளாலும் அபிப்பிராயங்களாலும் ஏற்பட்டதல்ல. நடந்த பல விஷயங்களை நானே நேரில் சீர்தூக்கிப் பார்த்து விசாரித்ததில் ஏற்பட்டவையென்று உண்மையாய்க் கூறுகிறேன்."

"டையுயியென்பூ ஜூன்மீ 14ஷ 1913ஞு."

S. M.

(தொடரும்.)

JEYACEELI'S TREASURE.

ஜெயசீலியின் பொக்கிஷம்.

மார்தமோ, டிசம்பர் மாதம்; குளிரோ கொடிதாயிருந்தது. மலையின் சுற்றுப்பக்கங்களிலேயிருந்து பனிக்காற்று பளீர் பளீரென்று வீசிற்று. தென்னமரங்கள் காற்றின் வேகத்தினுல் இப்பக்கமும் அப்பக்கமும் தள்ளாடி ஒன்ருேடொன்று மோதிக்கொண்டிருந்தன. அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தவர்கள் முதலாய் இக்காற்றின் கோஷ்டத்தினுலும், குளிர் மிகுதியினுலும், சரி

யாய்த் தூங்கமுடியாமல் நித்திரைபங்கமுற்று கம்பளி, துப்பட்டி முதலியவைகளினால் தேகத்தைப் போர்த்தி காலை முடக்கிக்கொண்டு படுத்த வண்ணமாயிருந்தார்கள். ஆனால், கோவிந்தன் என்னும் ஓர் இடையன்மட்டும் "வைகறைத் துயிலெழு" என்னும் மூதுரையை கடைப் பிடித்தவனாய் இக்கஷ்டங்களைக் கொஞ்சமேனும் பாராட்டாது வழக்கம்போல் நித்திரை தெளிந்து படுக்கையைவிட்டெழுந்து, பசுமாட்டின் பாலைக் கறந்து தன் எஜமானன் வீட்டிற்கும், வாடிக்கைக்காரர் வீடுகளுக்கும் அனுப்பும்பொருட்டு புறக்கடையிலிருந்த மாட்டுத்தொழுவத்தின் கதவைத் திறந்துபார்க்க, எதிரிலிருப்பது எதுவும் கண்ணுக்குத் தெரியாமல் எங்கும் ஏக இருட்டாய் இன்னும் சரியாய் பொழுது விடியாமலிருப்பதைக் கண்டு, அநுபோகத்தைக்கொண்டு வெளியேவந்து ஆடுமாடுகள் சரியாக இருக்கின்றனவாவென்று சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தபோது, அங்கு ஓர் நூதனத்தைக் கண்டான். அதாவது, ஒரு துணிமூட்டையைப்போல ஏதோவொன்று இருப்பதைப் பார்த்து கவனமாக அதை உற்றுநோக்கினான். பின்னும் அவன் அம்மூட்டையிடம் நெருங்கி அதைத் தொடாமல் கவனமாகக் கூர்ந்துபார்த்தான். அதினின்று ஓர் சிசுவின் சப்தம் வருவதையும், அம்மெல்லிய சப்தமானது புதிதாகப் பிறந்த பச்சைக் குழந்தையின் குரல் ஒலிபோலிருந்ததையுங் கண்டு பிரமித்தவனாய், கலக்கத்துடன் குனிந்து பின்னும் செவ்வையாக மூட்டையை உற்றுப் பார்த்தபோது, வெள்ளைத்துணியின்மீது கிடத்தப்பட்ட அது ஓர் சிறிய பாலகனென்று தெரிய வந்தது. அது பிறந்து சில நிமிஷநேரந்தானிருக்கவேண்டுமென்று எண்ணினான். உடனே அவன் வீட்டுக்குள் ஓடிவந்து, அப்போதுதான் நித்திரையினின்றும் எழுந்து வெளியேவந்து கொண்டிருந்த தன் எஜமாட்டியை யணுகி, இவ்வதிசயமான சேதியை யுரைக்க, அவளுந் திடுக்கிட்டு ஓடிவந்து அச்சிசுவைப் பார்த்து வாரியெடுத்து "ஐயோ, பாவம்! இப்பாலகன் இப்போதுதான் பிறந்த சிசுவடியம்மா! ஐயோ என்னருமைக் கண்மணியே, உன்னை யெந்தப்பாதகி, கொடுஞ்சூரி பெற்று, இப்பனிக்குளிரில் கீழே கிடத்திவிட்டுச் சென்றனளோ பஞ்சமாபாதகி" எனப் பரிதபித்து, "அப்பா, கோவிந்தா, நீ எப்படி இதனைக் கண்டுபிடித்தாய்! எந்தத் திருட்டு நாயோ, பிள்ளையைப்பெற்றுக் கள்ளத்தனமாய்க் கொண்டுவந்து இங்கே எறிந்துவிட்டுப்போயிற்று" என்று சொல்லிக்கொண்டு குழந்தையைக் கையிலேந்தினவண்ணமாய்ச் சந்தோஷத்தால் குதித்துக்கொண்டு தனது நாயகனிடம் ஓடினாள். நித்திரை தெளிந்தும் தெளியாமலுங் குளிருக்கஞ்சி, மஞ்சத்தில் புரண்டுகிடந்த தன் நாயகனைத் தட்டியெழுப்பி, "இதோ, பாருங்கள் அத்தான். நான் ஒரு அழகிய பசுங்கிளியைக் கொண்டு வந்தேன், பச்சைக்கிளி பாருங்கள்" என்று துகிலை மெதுவாய் நீக்கிக் குழந்தையைக் காண்பித்தாள். அக்குழந்தையோ பச்சைப்பாலகன். முகமோ வளர்பிறைச் சந்திரனைப்போலிருந்தது. அதன் நீலோற்பலம்போன்ற கண்களும், காந்தியான தேகமும், பட்டிலும் மிருதுவான மெல்லிய தலைமயிரும் தம்பதிகளின் மனதைக் கவர்ந்தன. துரைசாமி ஐயரும் அச்சிசுவை இரு கரங்களினாலும் மெல்ல எடுத்து, உச்சிமோர்ந்து வெகு பக்ஷத்துடன் மார்போடணைத்து முத்தமிட்டு, இக்குழந்தை தனது புத்திரியாகிய மங்களமரியைப் பார்க்கிலும் தேகம் மாசுமருவற்றதாகவும், முகம் களையும் காந்தியுமாய் இருக்கிறதாகவும் பகர்ந்து, திரும்பவும் சுந்தரம்மாள் கையில் கொடுத்துவிட்டார். இவர் ஏறக்குறைய நடு வயதைக் கடந்த விருத்தராயிருந்தபோதிலும், வயதிற்குத் தக்க குணமுடையவர். நன்னெறி வழா தொழுகுபவர். இப்பாலகன் அகப்பட்டது இவருக்கு ஒரு பக்கத்தில் சந்தோஷத்தை விளைத்தபோதிலும், மறுபக்கத்தில் கவலையையும் உண்டுபண்ணிற்று. ஏனெனில் "இது யாருடைய பிள்ளையோ, எவர் இங்கு விரோதத்தினால் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனார்களோ" வென்பதுபற்றியே. இதுதான் இவர் மனத்தை அடிக்கடி வாதித்துவந்தது. துரைசாமி ஐயருக்கும், அவரது மனைவி சுந்தரம்மாளுக்கும், இன்னும் அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்கும் அக்குழந்தை எப்படி அவ்விடம் வந்ததென்பதே அதிசயத்தை உண்டாக்கியது. சுந்தரம்மாள் தன் தோளின்மீது சாய்ந்திருந்த சிசுவை மறுதோளில் மாற்றும்படி முயலவும் ஏதோ கடிதமொன்று அக்குழவியைப் பொதிந்திருந்த துகிலினின்றும் கீழே விழுந்தது. மங்களமரி பரபரப்புடன் அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு தன் தாயாரைப் பார்த்து "அம்மா, இதோ ஒரு கடிதம் விழுந்தது. இதோ பாருங்கள்" என்று எடுத்துக் காண்பித்தாள். இக்கடிதத்தினால் இப்பாலகனின் விஷயம் ஏதாவது

விளக்கலாகும், இதனால் குழந்தையின் இரகசியத்தை ஒருவாறு தெரிந்துகொள்ள ஏதுவாகுமென்று எண்ணி, ஐயர், தன் மகள் கையிலிருந்த கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டார். கடிதத்துடன் ஐம்பது ரூபாய் செலாவணி நோட்டு ஒன்று அடக்கம் செய்யப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் எழுதியிருந்த விஷயமாவது :— இதனுள் அடக்கப்பட்டிருக்கும் ரூபாய் ஐம்பதையும் குழந்தையின் அவசரமான செலவுக்கு உடனே உபயோகித்துக்கொள்ளலாம். மேலும் யாரொருவர் இக்குழந்தையைக் கண்டெடுக்கிறார்களோ அவர்கள் இப்பணத்தைக்கொண்டு அதைப் போஷிப்பதோடு, தவறாமல் சென்னையில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகைகளில் யாதாவதொன்றில் பின்வரும் விஷயத்தை பிரசுரஞ் செய்விக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :—

கண்டெடுக்கப்பட்ட குழந்தை.

"கடந்த டிசம்பர் மாதம் 12-ந் தேதியன்று எவராலோ கைவிடப்பட்ட ஒரு பச்சைக் குழந்தை எனக்கு அகப்பட்டிருக்கிறது. அன்று பிறந்த சிசு. பெண்குழந்தை. அதன் வாரீசுதாரரானோர் அதைத் திரும்ப அடைய விரும்புவாரானால், மற்றும் வேண்டும் விவரங்களுக்கு, பின் கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளக்கடவார்கள்."

ஐயர் கடிதத்தையும் நோட்டையும் படித்துப் பார்த்தபின், அவ்விரண்டையும் மடியில்வைத்துக்கொண்டு ஆழ்ந்தயோசனையிலாழ்ந்தார். யாதோ ஓர் அநாதக் குழந்தை துரைசாமி ஐயருக்கு அகப்பட்ட செய்தி வெகு சீக்கிரத்தில் அச்சிறிய பட்டணம் முழுவதும் பரவியது. ஆனால் அக்குழந்தை யாருடையதென்று சொல்ல ஒருவராலும் முடியவில்லை. பெற்றாரும் உற்றாரும் எவரும் பிள்ளையைத் தேடிவரவில்லை. ஆகையினால், ஐயர் அக்குழந்தையைத் தனக்குச் சொந்தமாக எண்ணி தன்னிடமே வைத்துக்கொண்டார். சுந்தரம்மாளும் சொல்லொணா சந்தோஷத்துடன் அதைத் தன் சொந்தப் பிள்ளைபோல் பாவிக்கத் தலைப்பட்டாள். துரைசாமி ஐயர் புதிதாய் கிறீஸ்துமறையில் உட்பட்டவர். நல்ல யோக்கியர். தெய்வபய முடையவர். நல்ல கிறீஸ்துவரென்று இவரைத்தான் சொல்லவேண்டும். இங்ஙனம் அச்சிறிய பாலகனை தன்னிடமே வைத்துக்கொண்ட ஐயர், மறு வாரத்தில் திருச்சபை ஆசாரப்படியே அதற்கு ஞானஸ்நானச் சடங்கை அப்பட்டணத்தின் பங்கு சுவாமியார் மூலமாய் நிறைவேற்றினார். புருஷனும் பெண்சாதியும் பிள்ளைக்கு ஞானத்தாய் தகப்பனாக இருந்து அதற்கு "ஜெயசீலி" என்று பெயரிட்டார்கள்.

சில நாள் சென்றபின்னர் துரைசாமி ஐயர், குழந்தை கண்டெடுக்கப்பட்டபோது அதனோடு கிடைக்கப்பெற்ற கடிதத்திற் கண்ட வேண்டுகோளின்படி சென்னையிற் பிரசுரமாகும் தினசரி பத்திரிகைகளொன்றில் குழந்தையைப்பற்றிய விளம்பரத்தைப் பிரசுரஞ் செய்தார். இதன் பயனாக மாத மாதம் தவறாமல் பத்து ரூபாய் இவருக்கு வந்துகொண்டேயிருந்தது. ஆனால் பணம் அனுப்புகிறவர் இன்னாரென்றும், அவருடைய இருப்பிடம் இன்னதென்றும் தெரிந்துகொள்ளக்கூடாமலிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு ஊரிலிருந்து பணம் வந்ததன்றியே, அனுப்புகிறவர் கையொப்பமும் சரியாக விளங்காமலிருந்தமையினால்தான். இதனால் ஐயர் கலக்கத்திற்குள்ளாகி, குறித்த தபாலாபீசுக்குப்போய் விசாரணைசெய்து, பணமனுப்பினவர் பெயரையும் விலாசத்தையு மறிந்துகொண்டாராயினும் அவ்விலாசத்திற் குறிக்கப்பட்ட வீதி வீட்டிற்போய் விசாரிக்குமளவில் அப்பெயர் கொண்டவர் நான்தானென எவரும் வராததினாலும், அல்லது அப்பெயரினோர் இவர்தான் என்று சுட்டிக்காட்ட எவரு முன்வாராததினாலும், பணமனுப்பினவரைக் கண்டுபிடிப்பது அசாத்தியமாய்ப்போயிற்று. இவ்வாறாக இவர் சிரமம்பாராது ஊரூராய்ப்போய்த் திரிந்து விசாரித்தும் பயனில்லாமற்போன நிமித்தம் சலித்துவாளாவிருந்துவிட்டார். பணமாத்திரம் மாதந் தவறாது வந்துகொண்டிருந்தது. அதைப்பெற்றுக்கொண்டு ஐயரும் அவர் மனைவியும் தங்களுக்குத் தெய்வாதீனமாய்க் கிடைத்த குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சீராட்டிப் பாராட்டி அன்புடன் வளர்த்துவந்தார்கள்.

காரியங்கள் இவ்வாறாக நடைபெற்றுக்கொண்டுவந்தன. ஜெயசீலியும் ஐந்தாவது வயதை யடைந்தனள். இந்தச் சமையத்தில் வேறொரு அதிசயமான கடிதமும் பணமும் வந்தன. அக்கடிதத்தில், ஜெயசீலிக்கு ஐந்தாவது வயதின் இறுதி அணுகியதும், அச்சிறுமியைக் கன்னியர்மடத்தில் உட்பிள்ளையாக விடவேண்டுமென்றும், அதற்குப் பிடிக்கும் செலவை அறி

யாதவரொருவர் அட்டியின்றிகொடுத்து அதைப் போஷித்துக்கொண்டுவருவார் என்றும், இவ்வைந்து வருஷமளவாக வெகு அன்புடன் ஆதரித்துச்சிரமத்துடன் காப்பாற்றி வளர்த்துவருபவர்களுடைய கஷ்டத்திற்குத் தக்க வெகுமானம் கடைசியிற் கிடைக்காமற்போகாதென்றும் வரையப்பட்டிருந்தது. அதனடியிற் கையொப்பம் போலீஸ் உத்தியோகஸ்தர் எனக் கண்டிருந்தது. துரைசாமி ஐயர் இக்கடிதத்தைப் பார்த்ததும், அவருடைய தேகம் குலுங்கி முகம் சிவந்தது. தேகத்தில் வியர்வை தட்டியது. காரணம் யாதென்றால், அக்கடிதமெழுதிய அன்னியனுக்குக் குழந்தையின் பெயர் ஜெயசீலி என்று எப்படித் தெரியவந்ததென்பதைப்பற்றியேயாம். இது ஒரு பக்கத்தில் கஸ்தியையும் மற்றொரு பக்கத்தில் சந்தோஷத்தையும் அதிசயத்தையும் பிரமிப்பையும் கொடுத்தது. குழந்தையைக் கடந்த ஐந்து வருஷகாலமாகத் தங்கள் பிள்ளையைப்போல் பார்த்துவந்திருக்க, இப்போதுவந்த கடிதத்தினால் அப்பிள்ளைக்கு யாரோ வாரீஸ்தாரர் இருப்பதாகத் தெரிவதாலும், அதைக் கன்னியர்மடத்திற்கு அனுப்பவேண்டுமென்று ஆக்கியாபனையிடப்பட்டிருப்பதாலும் இவர்களுக்குக் கஸ்தியாகத்தானிருந்தது. விசேஷமாக, இதைத் துரைசாமி ஐயர் பெண்சாதியே பெரிதும் உணர்ந்தாள். ஆசையுடன் நெடுநாள் காப்பாற்றி வந்த பெரும் பொக்கிஷத்தைத் திடீரெனப் பறிகொடுக்கப்போகிறவளைப்போல பரிதபித்துப் பதறினாள். பெரிதுங் கதறினாள். ஆயினும் வேறு விதியில்லை. கடிதத்தின் கட்டளைக்கிணங்க ஜெயசீலியை மடத்தில் விட்டார்கள். மடத்தில் விட்டது முதற்கொண்டு முன்போலவே அறியாத ஒருவரிடமிருந்து மாத மாதம் அக்குழந்தையின் சாப்பாட்டுச் செலவுக்கும், படிப்பு, துணிமணி முதலிய மற்றச் செலவுகளுக்கும் வேண்டிய பணம் தவறாமல் தாயாரம்மாளுக்கு வந்துகொண்டிருந்தது. ஆனால், பெண்ணுக்குப் பதினான்கு வயதானவுடன் பணம் வருவது யாதுகாரணத்தினாலோ திடீரென நின்றுவிட்டது. இதை அறிந்த பரோபகார சிந்தையுடைய அம்மடத்தின் சிரேஷ்ட தாயாருக்கு ஜெயசீலியை மடத்தினின்றும் அனுப்பிவிடச் சற்றும் மனம்வரவில்லை. ஏனெனில், பெண்ணின் குணமும், படிப்பு விஷயத்தில் அவள் செலுத்திய கவனமும், புத்திசாலித்தனமும், அடக்கவொடுக்கமும், மேரை மரியாதையுடன் அவள் நடந்துகொண்டமாதிரிகையும் சகோதரிகளுக்கு அதிக சந்தோஷத்தையும் திருப்தியையும் கொடுத்ததினால், அவளை அங்கேயே நிறுத்திக்கொண்டால் மடத்துக்குப் பிற்காலத்தில் மெத்த பிரயோசனமாயிருப்பாள் எனக் கருதலானார்கள். ஆகவே அம்மாதினால் மடத்துக்கு அதிக செலவானபோதிலும் அவளை மடத்தைவிட்டு அனுப்பிவிட ஷை கன்னியர்மடத்துத் தாயாரம்மாளுக்குக் கிஞ்சித்தும் மனமில்லாமல், தங்களிடமே வைத்துக்கொண்டார்கள். மேலும் ஜெயசீலியின்மீது அவளுடன் பழகிய அனைவோருக்குமே நல்ல எண்ணமும், அபிமானமும் ஏற்பட்டது. துரைசாமி ஐயரோ, தமது இருப்பிடம் சற்று தூரத்திலிருந்தபோதிலும் அடிக்கடி மடத்துக்குவந்து பார்த்துப்போவதோடு, சிறுமிக்கும் சிற்சில சமயங்களில் அதன் சொந்த செலவுக்காகக் கொஞ்சம் பணமாவது பக்ஷணமாவது கொடுத்துப்போவதுமுண்டு. விசேஷமாக, மங்களமரி பள்ளிக்கூடம் வரும்போது அடிக்கடி மடத்திற்குவந்து தனது ஞான சகோதரியாகிய ஜெயசீலியைச் சந்தித்துப் போவாள்.

“அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.”

என்றபடி இவர்க ளிருவருக்கும் நாளுக்கு நாள் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் பிறைபோல் அன்பு வளர்ந்துவர, இருவரும் பிராண சிநேகிதராகி, நகமும் சதையும்போல் இருந்தார்கள். என்றாலும் மாரி சிலகாலம், கோடை சிலகாலம் என்பதுபோல் இதன்பின் நாளாவர்த்தியில் இவர்கள் மடத்தைச் சந்திப்பது கிருஷ்ணபக்ஷத்துக் சந்திரன் பிறைபோல் குறைவுற்று, கடைசியில் அமாவாசைபோல், முற்றும் போகாமலே நின்றுவிட சந்தர்ப்பங்கள் சில நேரிட்டன. அவற்றுள் மங்களமரி பள்ளிக்கூடம் விட்டது ஒன்று. இஃதிப்படியிருக்க,

ஒரு நாள், ஜெயசீலிக்குக் கன்னியாஸ்திரி பட்டஞ் சூட்டுவதைப்பற்றி, மடத்தில் சகோதரிகளுக்குள் ஓர் பேச்சு நடந்தது. அப்போது அம்மடத்து முதலாளியம்மாள், ஜெயசீலியின் ஆதி விருத்தாந்தம் இப்படிப்பட்டதென்ற விவரம் திட்டமாய்த் தெரியாததினால், அவளுக்கு அப்பட்டம் கொடுக்கப்படமாட்டாதென்று சொல்லவே, சகோதரிகளுக்கு ஜெயசீலியின் செய்தி அப்போதுதான் தெரியவந்ததால், தங்களுக்குள் இதைப்பற்றி அடிக்கடி பேசிவந்ததன்றியே, இவளை நிசிதமாய் எண்ணவும் நடத்தவுந் தொடங்

கினர். இவ்விஷயத்தையறிந்து, ஜெயசீலி கஸ்தியும், துக்கமும் அநுபவித்து, கவலை குடி கொண்ட நெஞ்சத்தினளாய் செய்வதியாதெனத் தோராது ஏங்கித் திகைத்து "கொழுகொம்பில்லாக் கொடிபோலானேனே!" என்று தனியே அழுதழுது அங்கலாய்ப்பாள். "அகத்தினழகு முகத்தில் விளங்கும்" என்பதற்கேற்ப செந்தாமரை மலரை யொப்பத் துலங்கும் இவள் வதனம் வெளுத்து வதங்கிய மலரை யொத்திருக்கும். அவள் முகத்தில், சாதாரணமாய்க் காணப்படும் காந்தி, மந்தகாசம், முதலிய செழிப்பு சந்தோஷக் குறிகள் அதை விட்டோட, ஏக்கம், திகில், அச்சம் அரசாளும் அகத்தோடும் முகத்தோடும் அவள் காணப்படுவாள். இவளைப் பார்க்கும் கந்நியர்களும் இவளது மாற்றத்தைக் கவனித்துக் காரணமறியாமல் கலங்குவார்கள். இஃதிங்ஙனமாக,

மே மாதத்தில் சென்னைப்பட்டணத்தில் ஓர் நாள் அதிக உஷ்ணமாக இருந்தது. அதிக வெயிலாயிருந்தமையால் புழுக்கமும் அதிகமாயிருந்தது. ஜனங்களால் தாளக்கூடமாயில்லை. சிலர் தெருத்திண்ணையில் உட்கார்ந்து சட்டைகளைக் கழற்றிவிட்டு விசிறியினால் வீசிக்கொண்டும், சிலர் வீடுவாசலெங்கும் தண்ணீர் தெளிக்கச்செய்து உஷ்ணத்தை ஒருவாறு தணித்துக் கொண்டுமிருந்தார்கள். சிலர், சற்று வெயில் தாழ்ந்ததும் கடற்கரை, மாரினா முதலிய விடங்களில் சுத்தமான குளிர்ந்த கடற்காற்றைச் சுகிக்கப்போகலாமென்றுங் கருதி, வெயில் தணிவதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். கடிகாரமும் நாலடித்தது. உடனே அவரவர்களும் தங்கள் தங்கள் அந்தஸ்திற் கேற்றவாறு உடுத்திக் கொண்டு அவாளவாளுடைய சௌகரியம்போல், கால் நடையாகவும் ரதாரூடராகவும் செல்வத்துக்கேற்ற சுகத்தோடு போனார்கள். ரோட்டில் மோட்டார்வண்டிகள் பறந்தன. கோச்சு வண்டிகள் வீச்சுவீச்சென்று ஓடின. ஜட்கா வண்டிகள் கடகடவென்று கடந்தன. துவிச்சக்கரவண்டிகள் விர்விர்ரென்று சென்றன. டிராம் வண்டிகள் கீச்சிட்டு ஓயாது ஓடிக்கொண்டிருந்தன. ஆயினும் ஜன நெருக்கம் குறையவில்லை. அன்றையத்தினமோவென்றால் தெருக்களிலே மனிதர் ஏராளமாகத் திருவிழாவுக்குப் போகும் ஜனங்களைப்போலத் திரள்திரளாகப் போனார்கள். ரஸ்தாக்களிலே பாதசாரியாய்ச் சென்று கொண்டிருந்தவர்கள் வண்டிகளிலே அகப்பட்டுக் கொள்ளாதபடிக்கு ஒதுங்கி ஓரமாகச் சென்றார்கள். வாலிபப் பிள்ளைகளோவென்றால் ஜும்மாளம்போட்டுக்கொண்டு உல்லாசமாகப் போனார்கள். அப்போது, அந்தோ! வழியிலே நடுரோட்டிலே எவனோ ஒருவன் டிராம்வண்டியிலிருந்து இறங்கி, பக்கத்தில் வேகமாய் வந்துகொண்டிருந்த கோச்சுவண்டியில் மோதுண்டுக் கீழே விழுந்து மூர்ச்சையானான். விரைவிலே ஜனங்கள்வந்து அவனைச் சூழ்ந்துகொண்டு பெரிய கும்பலாகக் கூடிவிட்டார்கள். கும்பல் கூடி விட்டதே தவிர அதில் ஒருவராவது ஸ்மரணை தப்பிக்கிடக்கும் வாலிபனுக்குச் சிகிச்சைசெய்ய முன்வந்து உதவக்காணோம். சும்மா பார்த்துக் கொண்டே நின்றார்கள். அச்சமயத்தில் டிராம் வண்டியிலிருந்து இறங்கின ஓர் செவிலித்தாய், (நர்ஸ்) இக்கண்ணராவியைப் பார்த்து விரைவாக ஓடிவந்து, காயம்பட்டு அநாதையாகக் கிடப்பவனிடம் நெருங்கி, அவன் ஸ்திதியைச் சரியாய் உணர்ந்துகொண்டு, தாமதமின்றி உடனே ஒரு ஜட்காவண்டி பேசி, அவ்வாலிபனை வண்டியிலேற்றிக்கொண்டு தானும் அவனுடனே "ஜெனரல் ஆஸ்பத்திரி" க்குச் சென்றாள். மறுநாட் காலையில் ஓர் பிராமணத்தாயும் மகளும் ஆஸ்பத்திரிக்குவந்து முந்தின நாள் காயம் பட்ட வாலிபனைப்பற்றி விசாரணை செய்தார்கள். ஆனால் அவனோ அதிக காயம்பட்டு அதினால் ஏற்பட்ட சிரமத்தினால் ஸ்மரணையற்று அயர்ந்து படுத்திருந்தான். ஆனால் அவ்விடத்திருந்த அதிகாரிகள் அச்சமயம் அவனிடத்தில் யாரும் பேசப்படாதென்று கண்டிப்பான உத்திரவுகொடுத்திருந்தார்கள். ஆனதினால் இவர்களிருவரும் (பையனைக் கொண்டுவந்து ஆஸ்பத்திரியிற் சேர்த்த) நர்ஸிடம் வாலிபனைப்பற்றி விசாரித்தபோது, அவனுக்குத் தலையிலே பலத்த காயம்பட்டதென்றும், அவனுடைய காயம் வெகு ஆபத்தானதென்றும், அவசியமாக ஆஸ்பத்திரியிலேயே சிலநாளிருந்து பக்குவமாகப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னாள் அந்த நல்ல நர்ஸ். இவர்கள் அந்தக் காயங்களைக் காட்டச்சொல்லிப் பார்த்துவிட்டு, நர்ஸை நோக்கி "அம்மா, நீங்கள் நல்ல உத்தமியாய்க் காணப்படுகிறீர்கள். எனது அருமை மைந்தனாகிய இவனை அதிகப்பத்திரமாகப் பாருங்கள். இதனால் உங்களுக்கு ஏற்படுஞ் சிரமத்துக்குப் பரிகாரமாக எங்களால் கூடிய சம்மானம் செய்யத் தவறமாட்டோம். அவனை உங்கள் தம்பியென்று எண்ணிக் கவனமாகத் தள

ராத சிரத்தையும் கவனமும்கொண்டு பாருங்கள், அம்மா" என்று சொல்லிப் பையை அவிழ்த்து நான்கு ரூபாய் எடுத்து நர்ஸிடம் கொடுத்து விட்டு "வருகிற வாரம் வருவோம், அதற்குள் சற்றுச்சுகமடையும்படி செய்யவேண்டும்"எனச் சொல்லி, விடைபெற்றுக்கொண்டு தன் மகளோடு வீட்டுக்குப்போய்விட்டாள் அவ்வாலிபனின் தாய். நர்ஸ் எடுத்துக்கொண்ட விசேஷ சிரமத்தினுல் பையனுக்கு ஒரு வாரத்திற்குள்ளே கொஞ்சம் சௌக்கியமாக, அவன் பேசவும், எழுந்து நடமாடவும் ஆரம்பித்தான். நர்ஸிடமிருந்து தனது தாயாரும் சகோதரியும் அவ்விடம் வந்துபோன சமாச்சாரத்தைப் பூரணமாக விசாரித்துத் தெரிந்துகொண்டான். பின் நர்ஸைப் பார்த்து "நீர் என்னை முழுதும் சௌக்கியப்படுத்தினீர். நீர்மட்டும் என் விஷயத்தில் சாக்கிரதை எடுத்துக்கொள்ளாதிருக்கும் பக்ஷத்தில் நான் எற்கெனவேமறுலோகம்சேர்ந்திருப்பேன். என்னை எப்பொழுது சௌக்கியமடையச் செய்தீரோ; அப்பொழுதே நான் உமக்கே முழுதும் உரியவனுயிருக்கிறேன். மேலும் என்னை ஆஸ்பத்திரியினின்று வீட்டுக்கு அனுப்பும்போது நீரும் என்னுடனேவந்து எங்களுடைய வீட்டில் சில நாள் எங்கள் மத்தியில் சந்தோஷமாய் இருக்க மன்றுடுகிறேன். நான் எனது பிரதிநன்றியைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போது தான் என் மனது திருப்தியாக இருக்கு" மென்றுன் அந்நோயாளி வாலிபன். அதற்கு நர்ஸ் "ஆ! சுவாமீ!! நான் ஒன்றும் நூதனத்தைச் செய்துவிடவில்லையே! நான் எனது கடமையைத்தான் செய்தேனே யன்றி வேறொன்றும் அதிகமாய்ச் செய்யவில்லையே" என்று சொல்லி "இவ்விடம் வரும் கணக்கற்ற நோயாளிகளைச் சௌக்கியப்படுத்தி, அவர்கள் சௌக்கியமான பின் நான் அவரவர்களுடைய வீடுகளுக்குப் போய் விருந்துண்டு வருகிறதென்றுல், எனக்கு இந்த வேலையே சரியாக இருக்குமாகையால், எனது வேலையைச்செய்ய எனக்குச் சாவகாசமிராது. இருந்தபோதிலும் உமது விருப்பத்தைத் தடுக்கவில்லை. ஏமாறச்செய்யவுமில்லை. மனம் நோகவைக்கவுமில்லை. உமது தாயாரும் சகோதரியும் அதிக அன்புடையவர்களாக இருக்கிறதினுலும், நான் அகத்தியம் அவர்களையும் வந்து பார்க்கிறே" னென்று சொன்னதின்பேரில் அவனுக்கு நல்ல சந்தோஷம் பிறந்தது. பின்னர் நர்ஸ் வாலிபனைப் பார்த்து "ஓ வாலிபரே! நீர் என்னைப் புகழ்ந்து ஸ்துதிசெய்யவேண்டாம். நான் அதற்குப் பாத்திரமானவள் அல்ல. நீர் சௌக்கியமடைந்ததைப்பற்றிக் கடவுளுக்கு நன்றிசெலுத்தவேண்டும். அவரே உம்மைக் காப்பாற்றினவர். உமக்கு நேரிட்ட காயமோ அபாயகரமான தென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. உண்மையிலே அது ஆபத்தானதே. டாக்டர்களும் தாங்கள் பிழைப்பீர்களென்று எண்ணவில்லை. அவர்களுக்கும் நம்பிக்கையில்லை. ஆனுல் எனது ஜெபமோ சிகிச்சையைவிட விசேஷமானதாய் அற்புதவிதமாகப் பலித்திருக்கிற" தென்றுள். அதற்கு வாலிபன் "நீர் சொல்லிய யாவும் சரிதான். நான் பாயும் படுக்கையுமாக இருந்தபோது, சில சமயங்களிலே இரவில் கண்விழித்துப் பார்த்தபோது நீர் வெகு பக்தி உருக்கத்தோடே வேண்டிக்கொண்டிருப்பதை அநேக முறை கவனித்தேன். யாருக்காக அப்படி வேண்டிக்கொள்ளுகிறீரோவென்றும் அதிசயப்பட்டேன். என், அழகிய புஷ்பத்தைப்போலிருக்கும் உம்மை நிர்ப்பாக்கியமும், வியாதியும், கஷ்டமும், துன்பமும் துர்நாற்றமும், நிறைந்திருக்கும்படியான இந்தவிடத்திலே யார் கொண்டுவந்து தள்ளிவிட்டுப்போனுர்களோ, என்று ஆச்சரியப்பட்டேன்" என்று மறுமொழி பகர்ந்தான். இதற்கு நர்ஸ் ஒன்றும் பேசவில்லை. அவ்வார்த்தைகளிலிருந்து அவ்விருவர்க்குள் ஒருவிதமான பரஸ்பர சிநேகமும், அன்பும், மரியாதையும் எற்பட்டதாக ஒருவருக்கொருவர் உள்ளத்தில் உணர்ந்துகொண்டார்கள். இவர்களிருவரும் இன்னும் எதோ பேச நாவெடுத்தார்கள். அச்சமயத்தில் வைத்தியசாஸ்திரம் கற்றுவரும் மாணவர் தங்களுடைய உபாத்தியாயருடன் அப்பக்கமாக வந்தமையால் உடனே சம்பாஷணையை நிறுத்திவிட்டார்கள். பின்னர் பகற்பொழுது போய் மாலைப்பொழுது நணுகியபோது மறுபடியும் அவ்விருவரும் தங்கள் சம்பாஷணையைத் தொடங்கினுர்கள்.

வாலிபன்.—அம்மா, நீர் கத்தோலிக்கு வேதத்தைச் சேர்ந்தவராயிருப்பீரோ?

நர்ஸ்.—ஆம், நான் கத்தோலிக்கு வேதத்தைச் சார்ந்தவளே. அதைப்பற்றி என்ன?

வாலிபன்.—உமது மதத்தாராகிய கத்தோலிக்கர் அநேகம்பேர்களிருக்கிருர்கள். விசேஷமாக நான் காலேஜ் கிளாசில் படித்தபோது வெகுவாக உங்களுடைய மதத்தைப்பற்றி வாசித்திருக்கிறேன். அம்மதத்தில் சொல்லியிருக்கும்

விஷயங்கள் யாவும் இப்போது முதலாய் என் மனத்தில் பசுமரத்தி லறைந்த ஆணிபோலும், கருங்கல்லிற் செதுக்கிய அக்ஷரம்போலும் ஆழ்ந்து பதிந்திருப்பதோடு எனக்கு அம்மதத்தில் சேரவேண்டுமென்ற அபேட்சையும் இருக்கிறது. ஆனால் எங்களுக்குள்ளிருக்கும் பொல்லாத ஜாதி ஆசாரமும் அதன் கட்டுப்பாடுமே எனக்கு முக்கிய தடங்கலாக இருக்கின்றன.

நர்ஸ்.—அப்படியானால் சரி; எனது பிரிய வாலிபரே, நீர்மட்டும் பிரமாணிக்கமாகவும், உறுதியாகவும், கடவுளிடத்தில் முழு நம்பிக்கை வைத்து அவரை நம்புவீராகில், கடவுள் உம்மை ஒருபோதும் கைவிடவேமாட்டார். அவர் உமக்கு வேண்டிய உதவி ஒத்தாசை செய்வார். உமக்கு யாதொரு தீங்கும், துன்பமும், கஸ்தியும் வரவிடார்.

வாலிபன்.—பிரிய நர்ஸே, எனக்காக விசேஷ விதமாக வேண்டிக்கொள்வீரென்றும் என்னை மறந்துவிடமாட்டீர் என்றும் நம்புகிறேன்—என்று சம்பாஷணையை முடித்தான்.

(இன்னும் வரும்.)

DUTIES OF A WIFE.

செல்வியர் நியதி.

(மனைவியின் கடமைகள்.)

(*All Rights Reserved.*)

1 புருஷனை மணந்த – பூவையர் ஒழுக்கம்
தெருளுற விளக்கித் – திரட்டிச் சுருக்கி
அருள்பெற வோத – அமலனி னுபய
மருமலர் கழல்கள் – மகிழ்தருங் காப்பே.

2 சென்னி குனிந்து – தெய்வம் வணங்கி
உன்னி கழுத்தை – உகந்து கொடுத்த
கன்னிமார்கள் – கணவனுக் கடக்கம்.

3 உலகமே படைத்த – ஒருவனே யன்றி
தலமிசை யுயர்ந்தோன் – தலைவனே யாகும்.

4 கொழுநன் பணியைக் – குறைவிலாச் [செய்து
தொழுதிடல் தெய்வம் – சொல்லுரைப் [படியே.

5 மணமது தந்த – மகிழ்ச்சியா முன்றன்
கணவனே யென்று – கருதுவாய் நேசம்.

6 எசமான் மகிழும் – எற்றநற் றொழும்பால்
வசமாக்குவது – மங்கையர் திறனே.

7 உள்ளன்பதனை – உரியசொற் செயலால்
வெற்றென விளக்கல் – மெல்லியருபாயம்.

8 சொல்வதும் செய்வதும் – துணைவன் களிக்க
வெல்லுவதவனின் – மிக்களியாகும்.

9 பத்தாவின் கட்டளை – பயந்துபணிந்து
சுத்தமாய்ச் செய்து – சுறுக்கெனமுடிக்க.

10 கொண்டவன்மீது – குறைசொலு மனைவி
மண்டலமீது – மாய்க்கிருள் அன்பை.

11 நாயகனோடு – நயந்துறவாடி
வாயதையடக்கிநல் – வார்த்தையாலிணக்கு.

12 துன்புற்றவேளை – துயர்முகங்காணில்
அன்புற்றசொல்லால் – ஆற்றுவாள்மனைவி.

13 என்றும் பிணக்கிங் – கில்லா நேசம்.
நன்று பதிவழி – நாடி நடக்க.

14 ஒருவரை யொருவர் – உகந்து சார்ந்து
வருவதுகொண்டு – வாழுதல் கடனே.

15 அன்னமாடை – அளிக்கும் நாதன்
சொன்னவாறு – தொழில்செயல் கடனே.

16 புருஷன் கருத்தொடு – பொருந்தி யில்லறம்
கருதி நடத்தல் – கடனும் மனைக்கே.

17 ஆர்வலன் நன்மை – அதனையே விரும்பி
தேர்வதுநாளும் – சிறப்பாம் மனைக்கே.

18 எசமானுரைக்கு – எதிருரையின்றி
நிசமாயெதுவும் – நிகழ்த்துதல் வேண்டும்.

19 கடவுளுக் கிரண்டாம் – கணவனுக் கடங்கி
புடவியிலதிகம் – புருஷனைச் சிநேகி.

20 தன்னுடன் தானே – சமரது புரிந்து
அன்னியராசையை – அடியொடு மாய்க்க.

21 தற்பர னுன்னைத் – தாங்கியே காக்கக்
கற்புடைத்தாதல் – கன்னியர்க் கழகு.

22 பொறையாதி நற்குணப் – பூஷணி யாகி
குறைவிலா நேசம் – குலவுதலழகு.

23 என்னிலு மழகு – எவருள ரென்று
இந்நில மீது – எண்ணுவாள் பதரே.

24 மணத்தை முகித்து – மணமதுசெய்த
குணத்தைக் குறித்துக் – கூறுவோர் பதரே.

25 கடிமணஞ் செய்த – கணவனுலென்ன்
மிடியுறும்பொழுதும் – விட்டுப்பிரியேல்.

26 பிறந்த வீட்டைப் – பிரிந்து பின்பு
மறந்தும் தனியே – மனைபோகாதே.

27 வேண்டு முதவி – விரும்பி யளிக்க
ஈண்டுன் தலைவன் – இருப்பதே பாக்கியம்.

28 பொன்னுடை பூண்டு – புருஷன் களிக்க
மின்னணி சூடி – விளங்கல் வேண்டும்.

29 உன்னுடன் தலைவன் – உறுத காலை
அன்னியர் காண – அலங்கிர்தம் தீதே.

30 வெகுளியை யறுத்து – வேரொடு களைந்து
தகுபொறை நாட்டல் – தலைவியின் கடனே.

31 அன்னிய புருஷர் – அகத்துழியுற்ருல்
மன்னிய வடக்கம் – வகித்திடல் கடனே.

32 வீட்டுப் பொருளின் – மேன்மை யறிந்து
தீட்டி யாண்டால் – செல்வம் பொழியும்.

33 கணவனைக் காசுக் – கலைக்கவேண்டாம்
குணமுடன் கொடுத்தால் – கொள்ளுதல் [நன்று.

34 திதிக்குயர் உடையணி – தேடிட வென்று
பதிக்கிடர் தருவது – பாதகமாகும்.

35 காதலன் பாதகக் – கடுவெழி புகுந்தால்
ஓதலா மாது – உத்தம நெறியே.

36 ஞாய மின்றி – நலியப் பேசும்
நாயகனுகில் – ஞானில மீது
வாயை யடக்கி – வதறிடா திருந்து
நோயென வெண்ணி – நோன்புறல் கடனே.

37 தலைவன் கோபம் – தானுறும் பொழுது
தலையால் வணங்கித் – தாழ்ந்திருந் தஃது
நிலையொழி வேளை – நேசமாம் பொழுது
கலைமதி யோதக் – கருதிட லாகும்.

38 அன்பனின் கையால் – அடிபடாதென்றும்
இன்ப முறுவாள் – இவளே மனைவி.

39 வைதிடு ம்ட்டும் – வைத்துக்கொளாமல்
உய்திடு வகையை – ஓர்ந்திடல் நன்று.

40 மலரும் மணமும் – மருவுதல் போலே
குலவி நீங்காக் – குணமே சிறப்பு.

41 நகமுஞ் சதையும் – நசையாப்பிரியா
வகையே வாழ்தல் – மனையினுக் கழகு.

42 வாய்ச்சொல்லாலும் – மனஞ்செயலாலும்
தீச் சுடுவதுபோல் – தீங்குறல் பாவம்.

43 யோக்கிய முற்று – யோகமா யில்லறப்
பாக்கியம் பெறுவாள் – பாரியாமவளே.

44 நையுறப் பேசி – நாயகன் வெகுளச்
செய்திடும் மனைவி – சிற்றறிவோடு
பையரவந்தனை – பயமிலா மிதித்து
ஐயுறும் மதியிலி – ஆவாளன்றே.

45 பாரியின் கடனும் – பாங்குற நடையும்
தீரமா யறியாஸ் – திரீகளும் பதரே.

(இன்னும் வரும்.)

M. P. M.

THE HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

2-ம் அதிகாரம்.

அஞ்ஞானக்குடும்ப சீவியம்—
அர்ச். மோனிக்கம்மாளின் சாந்தமும்
பொறுமையும்—கர்த்தர் அவளை மூன்று
பிள்ளைகளுக்குத் தாயாக்கி
ஆறுதலளிக்கிறர்.
(இரட்சண்யம் 355—369.)

"அன்புமறனுமுடைத்தாயி னில் வாழ்க்கை பண்பும் பயனுமது" என்பதற்கு நேர்விரோதமாய், எவ்வித பொருத்தமுமில்லாத இந் நிர்ப்பாக்கியம் நிறைந்த விவாகம் முடிந்தபிறகு, அர்ச். மோனிக்கம்மாளுக்கு நேர்ந்த துயரமும் சஞ்சலமும் கல்லான இருதயத்தையும் கரைக்குந் தன்மையுள்ளன வாயிருந்தன. இம்மணத்தினுல் தனக்குப் பாக்கியமுண்டாகும் என்று அவள் கொண்டிருந்த எண்ணங்கள் யாவும் நாள் போகப்போக, கனவுக்குச் சமானமாயின. இலையுதிர்காலத்தில் வீசுங் கடுங் காற்றினுல் மரத்தின் இலைகள் யாவும் உதிர்ந்து பறந்துபோவதுபோல, அவ்வெண்ணங்கள் யாவும் ஒழிந்தன. தனக்கு மணவாளனுய் வாய்த்தவன் வெகு வெடுப்புக்காரனென்றும், தனக்கிருக்கும் சாந்தம், பொறுமை முதலிய சற்குணங்களுக்கு எதிரிடையான துர்க்குணங்கள் நிறைந்தவனென்றும் அறிந்

தாள். இவ்வித கஷ்டகாலத்தில் அவளுடைய விசுவாசமும் தேவ சிநேகமும் அவளுக்குத் தெப்பம்போலிருந்திராவிட்டால், சந்தேகமின்றி தன் துன்பக்கடலைத் தாண்டிப்போகச் சக்தியற்று, அவநம்பிக்கையென்னும் சாகரத்தில் அமிழ்ந்திப் போயிருப்பாள்.

விவாகத்திற்குமுன் அவள் தன் தகப்பன் வீட்டிலிருந்தகாலத்தில், அவளுக்கு மனவமைதியும் மனச்சமாதானமும் பூரணமாயிருந்தன. விசுவாசமும் தெய்வபயமுமின்றிச் சத்திய வேதாநுசாரந் தப்பியிருக்கும் குடும்பத்தில் அப்படிப்பட்ட மனவமைதியும் மனச்சமாதானமும் கிடைக்குமா? ஒருக்காலுமில்லை. அப்படிப்பட்ட குடும்பங்களில் நிர்ப்பாக்கியமே நிறைந்திருக்கும். அக்குடும்பத்தார்கள் துன்மார்க்கத்திலேயே சீவித்துவருவார்கள். கொந்தளிப்புள்ள சமுத்திரமானது எவ்வித தங்குதடைக்கு மஞ்சாமல் தன்மேல் பாய்விரித்தோடும் கப்பலை விழத்தாட்டி மூழ்கடிக்குமாப்போல் அப்படிப்பட்ட குடும்பங்களில், மனிதனுடைய துர் ஆசாபாசங்கள் எவ்வித கட்டுக்கும் அடங்காமல் அவனுடைய பாக்கியத்திற்கு எதுகரமாயிருக்கும் மனச்சமாதானத்தைக் கெடுத்து என்னேரமும் அவனைக் கொடும் போராட்டத்திற் காளாக்கும்.

பாவம்! என்ன துர் அதிர்ஷ்டம் !! கொடுஞ்சூரியான மாமியார் ஒருத்தி அவளுக்கிருந்தாள். அவளுடனே அர்ச். மோனிக்கம்மாள் ஒன்றித்துச் சீவிக்கவேண்டியிருந்தது. ஆதலால் அர்ச். மோனிக்கம்மாளுக்கு நேர்ந்தவையாவும் அவளுடைய சீவியத்தை மெத்த துயரத்திற் குட்படுத்தினது. பத்ரீஷியூஸைப்போலவே அவளும் அக்கியானி. குணத்திலும் நடத்தையிலும் அவனுக்குச் சரியொத்தவள். ஒரு அகங்காரப்பிண்டம். மகா உக்கிரமுள்ள கோபிஷ்டி. வெடுவெடுப்புக்காரி. சாதாரணமாய் மாமிமார்களுக்குள் நாம் காண்கிறதுபோல், அவள் மனம் காய்மகாரத்தால் காய்ந்துபோகும். மாமியார் மெச்சிய மருமகளில்லை யென்பதுபோலும் அரசனெவ்வழி அவ்வழி குடிகளென்பதுபோலும் அவளுடைய வேலைக்காரிகளும், மாசில்லா சிரோமணியாகிய மோனிக்கம்மாளை பகைத்து வெறுத்துத் திரஸ்கரிப்பார்கள். அவ்வேலைக்காரிகள் தங்களுடைய பாலிய எசமாட்டியின்முன் தங்கள் கோபத்தையும் வெறுப்பையும் காட்டத் தைரியமற்றவர்களாய், மாசுமறுவில்லாமல் தூய லீலி புஷ்பத்திற் கிணையாயிருந்த அவள் பெயரைக் கெடுக்கும்படி, அவள்மேல் இல்லாததும் பொல்லாததுமான அவதூறு வார்த்தைகளைப் பின்புறணியாகப் பேசுவார்கள். இருபத்திரண்டு வயதுள்ள பாலியப் பெண்ணணவள், தன் புருஷனால் தனக்கு நேர்ந்த இவ்விதமான நிர்ப்பந்த கொடுமையாவையும் சாந்தத்தோடும் நிலை தவறாத உறுதியோடும் பொறுத்துக்கொண்டு, சுவாமி, உமது சித்தம் என் பாக்கியம் என்று சீவித்துவந்தது பெருங்காரியமல்லவா? அவளுடைய ஆழ்ந்த விசுவாசமும், கடவுள்மேல் அவளுக் கிருந்த உறுதியான நம்பிக்கையுமே, அவளுக் கொரு தெப்பம்போலிருந்து, துன்பமென்னும் சமுசார சாகரத்தில் அவள் அவநம்பிக்கைப்பட்டு அமிழ்ந்திப்போகாமல் அவளைக் கடைத்தேற்றிவந்தன.

அர்ச். மோனிக்கம்மாளுடைய குணத்திற்கும் அவளுடைய புருஷனாகிய பத்ரீஷியூஸ் என்பவனுடைய குணத்திற்கும் எவ்வளவோ பாரதூர வித்தியாசம்! நாள் போகப்போக இவ்வித்தியாசமானது அர்ச். மோனிக்கம்மாளுக்கு முன்னையவிட துலக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணப்பட்டது. தன் பரிசுத்த மனைவியின் சீவிய நடவடிக்கையெதுவும் அவனுக்குத் தெரியாது. அவளுடைய ஜெபதபங்களும் பத்தி முயற்சிகளும் அவனுக்கு இடைஞ்சலாயிருந்தன. அவளுடைய தானதர்மங்கள் அவனுக்கு மூடத்தனம் நிறைந்த குருட்டுப் பக்திக்கடுத்தவையாயும் மிஞ்சினவையாயும் தோன்றின. அவள் தாரித்திரர்களையும், வியாதியஸ்தர்களையும் சந்தித்தால், அல்லது தனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் அடிமைகள் விஷயத்தில் கொஞ்சம் உருக்க நேசம் காண்பித்தால், இவளென்ன விபரீத புத்திகொண்டவள் என்றெண்ணுவான். அவள் மோட்ச பாதையை நாடிச்செல்லும் ஒவ்வொரு அடிக்கும், அதாவது தன் ஆத்தும இரட்சண்யத்தைக் கோரி, அவள் செய்யும் ஒவ்வொரு சத்விஷயத்திற்கும், ஆயிரம் வில்லங்கங்கள் உண்டாகும். தெர்த்தூலியான் என்பவர் சொல்வது போல், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரை விசுவசியாத மனிதனுக்குவாழ்க்கைப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிறீஸ்துவப் பெண்பிள்ளையும், இப்படிப்பட்ட வில்லங்கங்களையும் துன்ப துயரங்களையும் அநுபவிக்கத்தான் நேரிடும்.

மனிதர்களையும் மற்றும் விஷயங்களையும் உற்று யோசித்து எதையும் தீரமாய்த் தீர்மானம் செய்யும் சக்தியுள்ள அவ்வாசிரியர் சொல்வது

போல் "ஒரு கிறீஸ்துவப் பெண்பிள்ளை மெய்யான கடவுளை அறியாத ஒரு அஞ்ஞானியுடன் சீவித்துக்கொண்டே, அக்கடவுளை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்வதெப்படி? தன் வேத ஒழுக்கப்படி அவள் கோவிலுக்குப் போகவேண்டியிருக்குந் தினத்தில், கொஞ்சம் முன்னேரமாகவே ஸ்நான ஜாகைக்குப்போய் அங்கு சிநேகிதர்களுடன் களித்துச் சம்பாஷித்துவரவேண்டுமென்பான். அவள் என்றைக்கு உபவாசம் அநுசரிக்கவேண்டியிருக்கிறதோ, அன்றைக்கே அவன் தன் வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடுசெய்வான். ஏதோ ஒரு தர்ம அலுவலாய் அவள் ஒருநாள் வெளியே போகலாமென்றிருக்கும்போது, ஊழியர்கள் அத்தினத்திலேயே வீட்டில் வெகு வேலையிருப்பதாய்ப் பாசாங்கு காட்டி அங்குமிங்கும் பரப்பரப்பாய்த் திரிவார்கள். தன் பெண்சாதி தெருத்தெருவாய்த் திரிந்து கர்த்தரில் தனக்குச் சகோதரர் சகோதரிகளாகிய எளியவர் குடிசைகளுக்குப்போய் அவர்களைச் சந்திக்க அப்படிப்பட்ட புருஷன் விடுவானோ? அவள் நடு இராத்திரியில் எழுந்து அர்ச்சியசிஷ்ட வாரத்தில் கோவிலில் நடக்கும் ஜெபதபங்களுக்குப் போக விடைதருவானோ? அக்காலத்திய அக்கியானிகள் சற்பிரசாதத்தை வெகுவாய் அவமதித்து இகழ்ச்சி செய்வார்களாகையால், தன் மனைவி தேவபந்தியில் அமர்ந்து நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் அவருடைய ஆத்துமத்தையும் தேவ சுபாவத்தையுமே உட்கொள்ள விடுவானோ? சத்திய வேதத்திற்காகத் தங்கள் பிராணனை ஒப்புக்கொடுத்த வேதசாட்சிகளின் சங்கிலிகளை முத்தமிட அல்லது அவர்கள் அடைபட்டிருந்த சிறைக்கூடங்களுக்குப்போய் அவர்களைச் சந்திக்க விடுவானோ? தரித்திரர்களுக்காவது, ஊர்விட்டு ஊர்போகும் எளிய பிரயாணஸ்தர்களுக்காவது அவள் ஏதாவது தர்மமாய்க்கொடுத்தால் அவன் தானியம் இருக்கும் பண்டகசாலையையும் திராட்சரசம் வைத்திருக்கும் அறையையும் சாற்றிச் சாவியைத் தன்வசம் வைத்துக்கொள்வான்" (Tertullian Ad uxorem. Lib III. Cap. 4.) ஒரு குடும்பத்திற்குச் சேர்ந்தவர்கள் யாவரும் ஒரே சத்திய வேதத்திற்குட்பட்டவர்களாயிருக்கும்பட்சத்தில், அப்படிப்பட்ட குடும்பத்தில் இதேவிதமான துன்பதுயரங்களும் பிரிவினைகளும் உண்டென்று, தொர்த்தூலியான் என்பவர் மரித்த பதினறு நூற்றாண்டுகளுக்குப் பிறகும், இன்னொரு சிறந்த ஆசிரியர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

அர்ச். மோனிக்கம்மாளின் அன்றாட சீவியம் அல்லது அன்றாட துன்பதுயரங்கள் இவ்விதமானவையே. தனது ஆத்துமத்திற்கு நஷ்டம் உண்டாகுமேயென்கிற பயம் அவளுக்கிருந்திராவிட்டால், தன் அஞ்ஞான புருஷனின் ஏவுதலுக்கிணங்கித் தன் வேதவழிப்பாட்டுகளை அசத்தியம் கைவிட்டிருப்பாள்.

தெர்த்தூலீயான் என்பவர் மீளவும் சொல்வது. "ஆனால் ஐயோ! ஒரு கிறீஸ்துவப் பெண்பிள்ளையானவள் ஒரு அக்கியான புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டும் கெட்டுப்போகாமல் நிர்மலமாயிருப்பது எப்படிக்கூடும்? அக்கியானிக்கு வாழ்க்கைப்பட்டவள் அக்கியானியைப்போல் நடந்தால்தானே சரியாயிருக்கும். அவள் தன் ஆடையாபரணங்களையணிந்து, தாசிபோல் தன் மேனியை மினுக்கிச் சிங்காரித்துத் தன் சுந்தரரூபத்தைக்காட்டித் தன் அகமுடையானின் கட்டுக்கடங்காத துர் ஆசாபாசங்களை அதிகரிப்பித்து, அவன் அக்கிரம ஆசையைக் கவரவேண்டியது. அவனுடைய காமம் நிறைந்த கண்களுக்குத் திருப்தியுண்டாகும்படியாகத் தன் மேனியைக் கொழுக்கவைத்து, அதனைப் பட்டாலும் பொன்னாலும் எந்நேரமும் அலங்கரித்துவைத்திருக்கவேண்டியது. மேலும் கடவுளுக்கு அடாத சகல விதமான துர் ஆசாபாசக் குறிப்புகளை யவனுக்குக் காட்டவேண்டியது. இப்படியெல்லாம் செய்தாலல்லவோ, ஒருத்தி ஓ ரக்கியானிக்கு ஏற்ற பெண்சாதியாயிருக்கக்கூடும். சத்திய வேத நல்லொழுக்கத்தின்படி நடக்கும் ஒரு கிறீஸ்துவப் பெண்பிள்ளை இப்படிச் செய்ய முடியுமா?"

அர்ச். மோனிக்கம்மாளுக்குக் கலியாணம் நிறைவேறினவுடனே, இவையாவும் அவளுக்குத் தெரியவந்தது. அவள் இன்னும் சிறுமியாயும் மாசற்றவளாயுமிருந்தபோதிலும், அகங்காரியாகிய தன் புருஷனுடைய நீச இருதயம் இத்தன்மையதென்று, ஆச்சரியத்துக்குரிய ஞானத்திருஷ்டியால் கண்டறிந்தாள். கடவுளின் திவ்ய சோதிக் கதிர் அவள் ஆத்துமத்தில் பாயவே, இன்னும் சேசுக்கிறீஸ்துநாதரை விசுவாசியாமல் அக்கியானத்தில் உழன்று திரியும் தன் புருஷனுடைய ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டுமென்னும் ஆசை அவள் மனதில் உதித்தது. அநேக கிறீஸ்துவப் பெண்பிள்ளைகளைப்போல் அவள்

மனஞ் சலித்துப்போகவில்லை. பத்ரீவியூஸைப் போல் ஒரு கொடிய அஞ்ஞானிக்கு வாழ்க்கைப் பட்டிருந்த ரோமை பிரபுகுலச் சீமாட்டியாகிய பூபியோலா வென்பவளைப்போல் நடக்கத் தொடங்கினாள். அதாவது, அந்த நிர்ப்பாக்கியத்திற்குரிய ஆத்துமத்தோடு கர்த்தர் தன்னை இணைத்தது அதனைக் கைநெகிழவட்டு நீங்கிப் போகும்படிக்கல்ல, ஆனால் அதற்கு மாறாக, அவ்வாத்துமத்திற்குச் சந்திய வேத இலட்சணங்களை வெளிப்படுத்தி அதனை மனந்திருப்பவே. அதுவே தன் அலுவல், அதுவே தன் கடமையென்பதாகக் கண்டுகொண்டாள். விவாகத்தினால் இணைக்கப்பட்ட ஸ்திரி புருஷர் இருவரும் நகமுஞ் சதையும்போல ஒருவர்க்கொருவர் உதவியாயிருந்து, இருவருமாய்த் தேவ ஞானத்தில் உயர்ந்து அர்ச்சிக்கப்படாவிட்டால் விவாகத்தின் பயனென்ன? அதற்கு அத்தனை மதிப்பென்னத்திற்கு? அவ்வந்தஸ்திற்குட்படுபவர்களுக்குக் கர்த்தர் கொடுக்கும் வரப்பிரசாதங்க ளென்னத்திற்கு? அவர்களுக்குள்ளிருக்கும் ஞானசம்பந்த மெதற்காக?

சுபாவத்திற்கு மேற்பட்ட நேசமென்பது ஒருபக்கமிருக்கட்டும். சுபாவத்திற்கடுத்த நேசத்தின் கிரியைதான் என்ன? வேதத்தின்மட்டில் அசட்டையையும் வெதுவெதுப்பையும் காட்டுபவர்களைச் சுறுசுறுப்புள்ளவர்க ளாக்குவதும், அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருக்கும் ஆத்துமத்தை தேவ நேச அக்கினியினால் பிரகாசிப்பிப்பதுமே. "கேட்டால் கொடுக்கப்படும், தட்டினால் திறக்கப்படு" மென்ற வேதவாக்கியத்தின்படி சுபாவதிற்கு மேற்பட்ட நேசத்தை முதலாய்க் கர்த்தரிடம் மன்றாடிக் கேட்டால்அவர் இல்லை என்று மறுப்பது கிடையாது. "எவனொருவன் பிரகாசத்தையுடைத்தாயிருக்கிறானே, அவன் ஞானப் பார்வையிழந்து அந்தகாரத்தில் கைதடவி அவதிப்படும் கபோதியின்மேல் தன் பிரகாசத்தை வீசட்டும். விசுவாசத்தில் திடமுள்ளவன் அவ்விசுவாசத்தில் திடனற்றிருப்பவனுக்குத் துணையாயிருக்கட்டும்" என்று அப்போஸ்தலர் சொல்லுகிறார். "மேலும் சீவியத்தை யுடைத்தாயிருக்கிறவன் மரித்தவர்களை உயிர்ப்பிக்கட்டும்." அந்தகாரத்திலும் மரணத்தின் நிழலிலும் உட்கார்ந்திருக்கும் ஒரு ஆத்துமத்தின் இரட்சண்யத்திற்காகத் துன்பப்பட்டுப் பெருமூச்செறிந்து தாரைதாரையாய்க் கண்ணீர் சிந்தி யழுவதும், அதற்கு மேலாய், அதற்காகத் தன் இருதயத்தின் உதிரத்தை முதலாய் ஒப்புக்கொடுப்பதும் தேவ சமுகத்தில் உச்சிதமும் மாட்சிமைதங்கியதுமான கிருத்தியம். மோனிக்கம்மாளின் மனதில் இப்படிப்பட்ட எண்ணங்களே குடிகொண்டிருந்தன. தன் புருஷனுடைய இரட்சண்யத்தை நாடி அவள் சகல கஷ்டங்களையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு சீவித்த சீவியமானது, வேதசாட்சி சீவியமென்னத்தகும்.

தன் தாயார் கொண்டிருந்த இச்சிறந்த எண்ணங்களை அர்ச். அகுஸ்தீன் சங்க்ஷேபமாய்ச் சில வார்த்தைகளில் நமக்குத் துலக்கமாய்க் காட்டுகிறார் அவள் தொடுத்த அப்படிப்பட்ட அருங் கருமத்தில் எப்படி அநுகூலப்பட்டாளென்று அவர் சொல்வதைக் கவனிப்போமாக. அதாவது "அவள் சிறுவத்தில் புண்ணியத்திலும் தேவ ஞானத்திலும் பயின்று, கர்த்தருக்கும் தன் பெற்றோருக்கும்பணிந்து நடந்துவந்தபடியால், தான் விவாகஞ் செய்தபிறகும் கர்த்தர் தனக்கென்று நியமித்த மணவாளனுக்கு அத்தியந்த வினையத்துடன் கீழ்ப்படிந்துவந்தாள்" என்பதே. மேலும், அகுஸ்தீன் சொல்வது "என் தேவனே, நீர் என் தகப்பனை வென்று அவர்மேல் வேதவெளிச்சத்தை வீசவேண்டுமென்று உருக்கப் பெருக்கத்துடன் என் தாய் ஆசித்ததால், தன் நிஷ்களங்கமுள்ள நடத்தையினாலும், சற்குணத்தினாலும் உமது மகத்துவ மாட்சிமையை அவருக்கு வெளிப்படுத்தவருந்தினாள்" என்பதாம். அவனைத் தேவ பாரிசமாய்த் திருப்ப, அவனோடு அவள் வாக்குவாதம் செய்யவுமில்லை. அல்லது அவனை நிந்திக்கவுமில்லை. மதுரகுணம், தாழ்ச்சி, பொறுமை, அடக்கவொடுக்கம் ஆகிய சுகுணலட்சணங்களைப் பூஷணமா யணிந்துகொண்டு அவனுக்கு உபசரணைக்காட்டிவந்தாள். தன் வாயால் வேதத்தைப் பிரசங்கியாமல், தன் சீவிய நடத்தையின் சாரமே அவ்வேதமென்பதாகக் காட்டினாள். மோனிக்கம்மாளின் நன்னடத்தையானது உண்மையாகவே ஒரு பலத்த காந்தம்போலிருந்து, தன் புருஷனுடைய மனதைக் கவர்ந்தபடியால், அவன் அதைத் தடுக்கமுடியாமல் அதன் சக்திக்குட்படவேண்டிய சமயம் வந்தது. ஆனால் இது ஒருநாளில் நடக்கக்கூடியகாரியமல்ல. சர்வேசுரனுடைய நேரம் வரவேண்டியிருந்தது. மேலும் அக்காலம் வர வீரத்துவமான புண்ணியங்களை யநுசரிக்கவும் வேண்டியிருந்தது.

மோனிக்கம்மாள் தன் புருஷனுடைய துர்க்குணத்தையும், மோகம் அகமியாகமனஞ் செய்யாதிருப்பாயாக வென்ற ஆரூம் கற்பனைக்கு

விரோதமாக, அவன் அந்நிய ஸ்திரீகளுடன் செய்யும் தகாத சகவாசத்தையும் சம்பூரணமாய் அறிந்திருந்தும், அதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாமல், தன் மனதில் அத்தியந்த துக்கம் அநுபவித்தாள். அவன் இல்லாத வேளையில் அவனுக்காக அழுது ஜெபம் செய்வாள். தன் தேவனுக்குப் பிரமாணிக்கமில்லாதிருக்கும் மனிதனானவன், கேவலம் ஒரு சிருஷ்டியாகிய தனக்குப் பிரமாணிக்கமுள்ளவனாயிருப்பானென்று எதிர்பார்ப்பது மூடத்தனமென்று கண்டுகொண்டு, தன் புருஷனுக்கு விசுவாசம், தேவநேசம் ஆகிய வரங்களைத் தந்தருளும்படி கர்த்தரைப் பார்த்து மன்றாடுவாள். ஏனென்றால் இவ்விரண்டு வரங்களில்லாமல் மனிதன் கற்புடையவனாயிருப்பது அசாத்தியமென்றவளுக்குத் தெரியும். அவன் கோபாவேசத்துடன் அவள்மேல் சினந்து, நச்சு நாகம்போல் சீறும்போது, மௌனம், பொறுமை, சாந்தம், பட்சம் காட்டுவது அவளுக்கு வழக்கம். அகோர கோபத்தினால் தன் நிலையே தனக்குத் தெரியாத மனிதனுக்கு, அந்நேரத்தில் என்ன சொல்லக்கூடும்? அவன் தன் கோபந்தணிந்து புத்திசுவாதீனமடையுமட்டும் காத்திருப்பாள். மூர்க்க குணமுள்ள சிலர் பட்சபாந்தவ முள்ளவர்களா யிருப்பதுண்டு. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் கோபத்தினாலும் மூர்க்க குணத்தினாலும் யாதாமொரு துஷ்டகிருத்தியம் புரிந்துவிட்டாலும், தங்கள் புத்தி தெளிவடைந்தபிறகு, தாங்கள் செய்த துர்கிருத்தியத்தை நன்குணர்ந்து விதனப்பட்டு அதற்குப் பரிகாரம்செய்யத் தேடுவார்கள். அச்சமயத்தில் அவர்கள் அதிக தயாளசித்தமுள்ளவர்களாயிருப்பார்கள். தன் புருஷன் இப்படி நல்ல குணமாயிருக்கும் தருணம்பார்த்து, அர்ச். மோனிக்கம்மாள் யாருக்குந்தெரியாமல் அவனோடு சாந்தமாய்ப் பேசி உண்டான நியாயத்தை எடுத்துக் காட்டிப் பட்சத்தோடு அவனைக் கண்டிப்பாள். இவ்வார்த்தைகளையெல்லாம் பத்ரீஷியூஸ் கேட்டு "ஆம், ஆம்; சரி சரி" யென்று ஒத்துக்கொள்வான். தன் கூட்டாளிகளாகிய, வேறு கட்டுக் கழுத்திகள் தங்கள் வாலிப புருஷன்மாரிடம் அடிபட்டு முகம் வீங்கிக் காயமடைந்து இவளிடம் ஆறுதல் தேடவந்தால், இவள் அவர்களைப் பார்த்து "எவ்வித உபாதைகளையும் மவுனத்துடன் சகித்துக்கொள்ளுங்கள். உங்கள் புருஷன்மாருடைய கோபந் தணிந்தபிறகு, மதுர குணத்தோடு அவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். இரகசியம் இருப்பதெல்லாம் இதிலேதா" னென்பாள். "யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு என்றபடி, உங்கள் நாவுகளைக் காப்பதின்மட்டில் எச்சரிக்கையாயிருங்கள்" என்றவர்களுக்குப் போதிப்பாள். இவ்விஷயத்தில் அவள் அவர்களுக்குப் புத்திசொல்லத்தக்கவள்தானென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெள்ளிடையான விஷயமே. ஏனெனில் பத்ரீஷியூஸைவிட அதிக கோபிஷ்டன் யாருமே கிடையாது. இருந்தாலும் அவன் என்னதான் கோபங்கொண்டிருந்த போதிலும் ஒரு அடியாவது மோனிக்கம்மாளை அடித்தவனே யல்ல. சில சமயங்களில் அதிக கோபவெறிகொண்டிருக்கும் சமயத்தில், கையோங்கி அவளை அடிக்கப் போவான். ஆனால் அந்நேரத்தில் மதுரம் நிறைந்த முகத்துடன் அவள் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும், ஓங்கிய கையைத் தாழ்த்திக்கொண்டு, அப்பால் போய் விடுவான். கலியாணத்திற்குமுன் பத்ரீஷியூஸை யறிந்திருந்த தகாஸ்தேபட்டணத்தார் யாவரும், இப்படியாக இம்மாது சிரோமணி தன் பொறுமையினால் அவனுடைய மூர்க்கத்தை யடக்குவதைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். இதுமாத்திரமன்று. சாந்தம், மௌனம், ஜெபம் முதலிய ஆயுதங்களைப் பிரமாணிக்கத்தோடும், மாறா நிலைமையோடும் கையாடிவந்ததினால், நாளாவட்டத்தில் தன் புருஷனுடைய கண்ணுக்குச் சர்வ சுகுணாலங்கிர்த பூஷணியாயும், சுந்தர சொரூபியாயும் தோன்றினாள். தன் மனைவி இப்படிப்பட்ட உத்தம பெண்கள் நாயகம் என்று அவன் ஒருபோதும் நினைத்ததேயில்லை.

(தொடரும்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

சந்தேக வினா?
அர்ச். அந்தோனியார் சரீரம்.

சங்கைக்குரிய பத்திராதிபரவர்களுக்கு,

நாளது ஆகஸ்டுமீ வெளியான "நல்ல ஆயன்" 119-ம் பக்கத்தில், "அர்ச். அந்தோனியார் சடலம் நாளதுவரை காப்பாற்றப்பட்டிருந்

தனை, நிகழும் யுத்தத்தில் ஆஸ்திரிய வெடிகுண்டுகளால் சேதப்படாதபடி, பாதுவாபட்டணத்திலிருந்து ரோமைநகருக்குக் கொண்டுபோகப் பட்டதாய்" வாசிக்கலானேன். உலகில் நாளது வரை அர்ச். சவேரியாருடைய திருச்சரீரம் ஒன்று மட்டுமே அழியா வஸ்துவாய்ப் புதுமைவாய்ந் திருக்கிறதாக அவரது சரித்திர புஸ்தகத்தில் வாசித்தும் கேட்டுமிருக்கிறேனே தவிர, வேறு அர்ச்சியசிஷ்டவர்களின் திருச்சடலங்கள் அழியாதிருக்கிறதைக் கேள்விப்பட்டதில்லை. நிற்க, அர்ச். அந்தோனியாரின் பிரார்த்தனையில் "நன்னுக்கழியாத நற்றவராகிய—" என்று குறிப்பிட்டதால், அந்தப் புண்ணியவாளருடைய நாவுமட்டும் அழியாதிருக்கலாமென்பது எனது எண்ணம். ஆதலால், சங்கைக்குரிய பத்திராதிபரவர்களாவது, பத்திரிகா நேயர்களாவது கோடி அற்புதரின் சடல விசேஷத்தையும், அழியா திரேகத்தையுடைய புண்ணியவாளர்களுடைய நாமதேயங்களையும் இப்பத்திரிகைவாயிலாய்த் தெரிவித்து, என் சந்தேகத்தை நிவர்த்திக்க மிக்க வாஞ்சையுடன் கேட்டுக்கொள்ளும்,

எலிப்படை முசலா, 8—8—8. } ப. ம. அந்தோனி.

[அர்ச். அந்தோனியாருடைய சரித்திரத்திலும், காத்தலிக் என்சைக்கலோபீடியா என்னும் கலாசாலை நிகண்டு முதலிய ஆதார நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறபடி; அவருடைய சரீரம் அழிந்துபோயிற்று. ஆயினும் அவருடைய நாவு மாத்திரம் அழியாமல் உயிருள்ள நாவைப்போலிருக்கிறது. அர்ச். அந்தோனியார் மரணமடைந்த 32-வருஷங்களுக்குப்பிறகு பதுவாபுரியில் அவருடைய சபையாருக்காகக் கட்டப்பட்ட சிறந்ததோர் ஆலயத்தில் அவருடைய சரீரத்தைப் பூச்சியமாய் வைப்பதற்காக அது அடக்கம்பண்ணப்பட்டிருந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது, அவருடைய நா வொன்றேயழியாமலும் மற்ற யாவுமழிந்துமிருப்பதாகக்கண்டு, நாவை யெடுத்து, விலையேறப்பெற்ற விசித்திரப் பெட்டகத்தில் அடக்கிப் பத்திரப்படுத்தி, மற்றவைகளை வேறொரு பெட்டியிலடக்கி அவைகளை அப்புதுக் கோவிலில் பூச்சியமாய் வைத்திருக்தார்கள். இவ்விரண்டு பெட்டிகளையே ஆஸ்டிரியர்களுடைய வெடிகுண்டு இவ்வாலயத்தின் மேல் விழுந்தபோது உரோமாபுரிக்கு எடுத்துக் கொண்டுபோய் வத்திக்கான் மாளிகையில் பத்திரப்படுத்திவைத்தார்கள். ஆகையால், ஆகஷ்டுமீ ஆயனில் "அர்ச். அந்தோனியாருடைய சரீரம் பதுவாபுரியில் அது அடக்கப்பட்டிருந்த கோவிலிலிருந்து ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டது" என்றபோது, அவருடைய அருளிக்கங்கள் அடங்கியிருந்த பெட்டிகள் விஷயமாய்ச் சொன்னதாக பொருள்படுத்திக்கொள்ளவும்.

அர்ச். சவேரியாருடைய சரீரம் அழியாமலிருப்பதுபோல் இன்னுஞ் சில அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரீரங்கள் அழியாமலிருக்கின்றனவென்பதற் கையமில்லை. இதற் கத்தாட்சியாக இம்மாச ஆயனில் 218-ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிற மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகையான மரி அசுன்தா சகோதரியின் மரணம், அடக்கம் இவைகளின் வரலாற்றை வாசிக்கவும். எமக்கு சவகாசப்படும்போது சரீரம் அழியாமலிருக்கும் இன்னுஞ் சில அர்ச்சியசிஷ்டவர்களின் நாமதேயங்களையும் வெளியிடுவோம். ப—ர்.]

அர்ச். பிரான்சிஸ் சவேரியார்.

ஐயா,

அர்ச்சியசிஷ்டவர்களையும், அவர்களுடைய வணக்கத்தையும்பற்றி ஒருவாறு அவமதிப்பாய் பேசிநடந்துகொள்ளும்புரொடஸ்டாண்டார்கள், ஓர் அர்ச்சியசிஷ்டவரைப் புகழ்ந்து பேசுதலைக் கேட்பது கத்தோலிக்கருக்கு களிப்பைத் தருமெனக் கருதி "இன்டர் நாஷனல் ரிவியூ" என்னுமோர் ஆங்கிலப் பத்திரிகையில், டாக்டர் மானிக்கல் என்னும் புரொடஸ்டாண்டார் ஒருவர், நமது சிந்து தேசத்துக்கு அப்போஸ்தலரான அர்ச். சவேரியாரைப்பற்றி வரைந்த ஓர் அபிப்பிராயத்தை "இந்தியன் ரிவியூ" வில் கண்டபடி மொழிபெயர்த்திருக்கிறேன். அதை "நல்ல ஆயன்" னில் பிரசுரிக்கத் தயைபுரிவீரெனப் பிரார்த்திக்கின்றேன்.

"அப்போஸ்தலரும், வேதபாரகரும், ஞானதுரந்தரருமான அர்ச். சவேரியாரைப்பற்றி, புரொடஸ்டாண்டாருக்கு அவர் பேர் மாத்திரம் ஒருவாறு தெரியுமேயன்றி மற்றொன்றுந் தெரியாது. ஆனால், கத்தோலிக்கருக்கோ அவர் ஒரு பெரும் பொக்கிஷமாவர். சவேரியார் சேசு சபையைச் சேர்ந்தவராயினும், சேசு சபையார், புரொடஸ்டாண்டார் கண்ணுக்குத் தோன்றுகிறபடி, அவர் அவ்வளவு தந்திரமும், கடின சித்தமுமுடையவரல்ல. அவர் அர்ச். இஞ்ஞாசியாருக்கு மிகவும் உகந்த சீடன். ஆனால் சேசு சபையாரின்

சூழ்ச்சிகளில் கடைத்தரமான அர்ச். சவேரியார் அன்பின் சுழல்காற்ருக இருந்தார். அவருக்கிருந்த அசைக்கப்படாத தைரியத்தை எவ்வித ஆபத்தும் எதிர்க்கமுடியாது. அவர் சேசுக்கிறீஸ்துநாதர்மட்டில் பரிசுத்த பற்றுதல்களைப் பூரணமாய்க்கொண்டவர். தேசங்கள்தோறும் விரைவாய்ச் சென்று இந்தியா, இலங்கை, மொலுக்காஸ், ஜப்பான் இவை முதலிய தேசங்கள் எல்லாம் சுற்றி கடைசியாய் சீனவில் மரணமடைந்தார். அர்ச். பவுல் எத்தன்ஸ், ரோமாபுரி முதலிய இடங்களுக்குப் போனபோது அவருடைய இருதயத்தில் அக்கினியெரிந்துகொண்டிருந்ததுபோல அர்ச். சவேரியாருடைய இருதய கமலத்திலும் அக்கினி எப்போதும் எரிந்துகொண்டிருந்ததே யொழிய அணையவில்லை. ஒரு இடத்தில் சொற்பகாலம் கழிக்கிறதற்கும் அதிசீக்கிரத்தில் வேதம் பரப்புவிக்கிறதற்கும் அவர் குறைகூறப்பட்டார். இவர் பாதை அடைப்பவரும், பாதை செப்பனிடுபவரும், பாதை திறப்பவரும், அறியாதவரிடம், துணிந்துசெல்பவருமாக இருந்தார். துணிகரமுள்ள பிரயாணியைப்போல் சந்தோஷ இருதயம் கொண்டிருந்தாரே யொழிய மந்தம்கொண்ட இஸ்பானியனைப்போல் இருக்கவில்லை. அகமகிழ்ச்சியாய் இருப்பதுடன் சிறு குழந்தைகள்மட்டில் வெகு நேசம் காட்டினர். அர்ச். பெர்நர்த், அர்ச். பிரான்சீஸ் அசிசி என்பவர்களைப்போல் கிறீஸ்துநாதருடைய பக்தர். இவருடைய ஜீவியம் தேவ ஊழியத்திற்காக உழைக்கும் மாணுக்கர்களுக்கு ஓர் முன்மாதிரிகை.”

“போர்த்துக்கேசியர் கோவை நகரிலும் மற்றும் இடங்களிலும் செய்த அநீதங்களின்பேரிலும் குரூரநடபடிக்கைகளின்பேரிலும் அருவருப்புக்கொண்டார். பலாத்காரத்தால் ஒன்றும் பலியாதென்பது அவருடைய கொள்கை. ஆனல் பிறர் சிநேகத்திற்கும் அன்புக்கும் பலாத்காரம் பண்ணுவார். அவருடைய ஜீவியம் கடவுளுக்கும் அயலாருக்கும் வணக்கத்தையும் அன்பையும் காட்டியது. சிநேக சந்தோஷத்திற்கும், புத்திக் கூர்மைக்கும், ராஜ்ய விஷயத்திற்கும் ஞானகாரியங்களுக்கும் அவர் தலைமையாக நின்ருர். கடவுளோடு ஒன்றித்திருக்கவே ஆசைப்பட்டார். அவ்விதமே ஒன்றித்திருந்தார்.”

தூத்துக்குடி, 6—8—18. } இங்ஙனம். ஜே. பிச்சை றெட்றிகஸ்.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை சென்னை சிந்தாத்திரிப்பேட்டை கிளைச்சங்கத்தின் விசேடக் கூட்டம்.

நிகழு மாண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஷை கிளைச்சங்கத்தின் உபகாரியத் தலைவர், காரியதரிசி முதலானவர்களின் பெருமுயற்சியால், சென்னை, நரசிங்கபுரம் அர்ச். அந்தோனியார் ஆலய மண்டபத்தில் விசேடக்கூட்டம் நிறைவேறிற்று. சூசிபத்திரிகையிற் குறித்த வண்ணமே (1) 3-30 மணிக்குக் கூட்டந் துவக்கப்பட்டது. ஷை நரசிங்கபுரத்தைச்சார்ந்த அர்ச். அந்தோனியார் தியான பஜனை சபையாரால் நவீன ராக தாளங்களுடன் அர்ச். அந்தோனியாரின் திருப்பெயரால் தோத்திரக் கீதங்கள் பாடப்பட்டன. (2) ஷை நரசிங்கபுர நிவாசியாராகிய கனம் ச. ம. கித்தேரி ஆரோக்கியசாமி பிள்ளை யவர்கள் “அறம்” என்னும் நற்கிரியையைப்பற்றிச் சமயோசிதமான கதைகளுடன் இனிமையான நடையில் உபந்நியாசஞ் செய்தார். (3) நமது சபையின் பிரதம காரியதரிசியாகிய கனம் த. தாமஸ் பிள்ளை யவர்கள் “ஒழுக்கம்” என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்து, வாலிபர்கள் இளமைப்பருவத்தில் அனுசரிக்கவேண்டிய சில முறைமைகளை யெடுத்துரைத்தனர். (4) நமது சிந்தாத்திரிப்பேட்டை கிளைச்சங்கத்தின் உபசபைத் தலைவர் கனம் L. பீட்டர் கண்ணுசாமி பிள்ளை யவர்களின் புத்திரனும், புத்திரியும் நமது சபையின் நன்னேக்க முதலானவைகளைப்பற்றி ஆங்கிலேய பாஷையில் “வினவிடை சம்பாஷணை நிறைவேற்றினர். இச்சிறுவர்கள் தங்களுடைய இளமைப்பருவத்தில் சபையின்கண் முன்னின்று, அச்சமென்பதை முற்றிலுந் துறந்து தங்களுடைய கடமைகளைச் சாலசிறப்புடன் நடத்தினர்கள். இது மிகவும் வியக்கத்தக்கதே. இக்கிளைச்சங்கத்தின் உபசபைத்தலைவரவர்கள் தம்முடைய கிளைச்சங்கத்தின் விருத்தாந்தம் முதலானவைகளைப்பற்றிப் பேசினர். திருமயிலை கிளைச்சங்கத்தின் காரியதரிசியாகிய உபாத்தியாயர் கனம் J. ஆரோக்கியசாமி பிள்ளை யவர்கள் சபையின் முன்னேற்றத்தைப்பற்றிச் சில விஷயங்களை யெடுத்துரைத்தனர்.

நமது சபைத் தலைவரவர்களே இக்கூட்டத்திற்குச் சபா நாயகராக வீற்றிருந்து சர்வ காரியங்களையும் நிறைவேற்றி, இக்கிளைச்சங்கத்தார்,

இக்கிளையை ஸ்தாபித்த சின்னாட்களுக்குள்ளாக ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்டினதைப்பற்றி மிகவுங் களிப்புற்றிருப்பதாக உள்ளன்புடனுரைத்தனர். இத்தன்மைப்போலவே மற்ற கிளைச்சங்கத்தார்களுஞ்செய்வார்களேயாகில்நற்பலனைப் பயக்குமென்பாம்.

“முயற்சி திருவினையாக்கும்” என்னும் பொய்யா மொழிக் கிணங்க. இக்கூட்டத்தின் போது, ஷை கனம் ச. ம. கித்தேரி ஆரோக்கியசாமி பிள்ளை யவர்கள் இரண்டாவது வகுப்பு ஜீவியகால அங்கத்தவராகவும், ஷை நரசிங்கபுரவாசிகளில் பதின்மர் சாதாரண அங்கத்தவர்களாகவுஞ் சேர்ந்தனர். இதுவன்றோ நமது சபையின் விருத்திக்கு நற்சாட்சி! “வருந்தினால் வாராதது இல்லை” யென்பதைப்போல் நம்முடைய இரண்டு வருடகால முயற்சியால், தற்போது நமது சபையின் அங்கத்தவர்களுடைய புத்திரர்களில் 7 மாணவர்கள் அரைச்சம்பளங் கொடுத்துத் தங்களுடைய கல்வியைப் பயில உதவி செய்து வருகின்றனம்: இவ்விஷயத்திற்காக மாதமொன்றுக்கு ரூபாய் பதினைந்து செலவிடுவதாகவுத் தீர்மானித்திருக்கின்றனம். இதுகாறுஞ் சேகரஞ் செய்துள்ள தொகை இரண்டாயிரத்துநூற்றுமுப்பத்திநான்கு. இத்தொகையைச் சென்னை பிரதம தபால் ஆபீசு சேவிங் பாங்கில் சேர்த்துவைத்திருக்கின்றனம். நம்முடைய நன்னோக்கங்களைப் பூர்த்திசெய்ய சுமார் ரூபாய் இருபதினாயிரம் வேண்டியதாக விருக்கின்றமையால், சத்திய கத்தோலிக்குச் சகோதரர்கள் முன்வந்து தங்களாலியன்ற நன்கொடைகளைக் கொடுத்துதவுவார்களென நம்புகின்றனம். “நன்மைவிளைத்தால் நன்மைவிளையு” மென்பதை யன்னோர்க்கு சினைப்பூட்டுகின்றனம்.

சுபம்! சுபம்! சுபம்!!!

த. தாமஸ் பிள்ளை,
பிரதம காரியதரிசி.

MISCELLANEOUS NEWS & NOTES,

பற்பல சமாச்சாரம்.

சமாதானத்தின் இராக்கினி.—என்று நமதாண்டவளுக்குச் சூட்டப்பட்டிருக்கும் புதிய நாமதேயத்தின் பேரால் ஐரோப்பாவில் அநேக கோவில்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஜெருசலேம்.—இவ்விடத்தில் தற்போதுள்ள ஆங்கிலேய கத்தோலிக்குப் போர்ச்சேவகர்கள் தங்களுக்கு ஒழிவு நேரங்கிடைக்கும்போதெல்லாம், நமதாண்டவர் கபாலமலைக்குச் சிலுவை சுமந்துகொண்டுபோனவழியாய்ச் சென்று, சிலுவைப்பாதை சேவித்து வருகிறார்களாம்.

துக்கங்கொண்டாடுதல்.—நிகழும் யுத்தத்தில் தான் சாகக்கொடுத்த 13-இலட்சம் போர்ச்சேவகர்களுக்காகவும், கைதிகளாக்கப்பட்டிருக்கிற 10-இலட்சம் போர்ச்சேவகர்களுக்காகவும் பிரான்சுதேசம் மிக்க அனுதாபப்பட்டு துக்கங்கொண்டாடுகிறதாக சங். ப்லின்ஸ் சுவாமியார் கூறுகிறார்.

பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர்.—இவர் பாப்பரசராக அர்ச். இராயப்பர் சிம்மாசனம் ஏறி ஞான ஆளுகைபுரிந்துவரும் 4-வருஷங்களுக்குள் 4-புதிய அதிமேற்றிராசனங்களையும், 12-மேற்றிராசனங்களையும், 8-விக்காரியேத் அப்போஸ்தொலிக் ஸ்தானங்களையும், 3-பிரிபெக்த் அப்போஸ்தொலிக் ஸ்தானங்களையும் ஏற்படுத்தியுள்ளார்.

சங். டாண்ரோண்ட் சுவாமிகள்—இவரே உலகத்திலுள்ள குருக்களுக்குள் மிக்க வயோதிபர். இவருக்குத் தற்போது $99\frac{1}{2}$ பிராயத்துக்கு அதிகமாகிறது. இவ்வளவு பிராயஞ் சென்றவராய் இவர் இருந்தபோதிலும் தம்முடைய குருத்துவக் கடமைகளை அனுதினமும் அனுஷ்டித்துவருகிறார். நாடோறும் திவ்யபூசை செய்யவும் தமது கடமை செபங்களைச் செபிக்கவும் தவறுகிறதில்லை.

பக்திக்குரிய ஓர் நல்ல ஏற்பாடு.—அமெரிக்காதேசத்திலுள்ள சகல கத்தோலிக்குக் கோவில்களிலும் மத்தியானவேளையில் மணியடிக்கப்படுகின்றது. அம்மணிச் சத்தத்தைக் கேட்டவுடன் போர்க்களத்தில் போர்புரியும் தங்கள் போர்ச்சேவகர்களுடைய க்ஷேமத்துக்காக ஒவ்வொருவரும் ஓர் சிறிய ஜெபம் சொல்லுகிறார்களாம். அவ்வாறு நமது நாட்டிலும் வேண்டிக்கொள்வது மெத்தவும் விரும்பத்தக்க காரியமாகும்.

பிரின்ஸ் ஆப் வேல்ஸ்.—இவர் நமது சக்கரவர்த்தியின் சிரேஷ்ட குமாரரென்று

நாமெல்லோரும் அறிவோம். சிறிது காலத்துக்குமுந்தி இவர் ரோமாபுரிக்குப்போய் அவ்விடத்தில் பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரின் தரிசனமடைந்து, அவருடன் தனித்து அன்னியோன்னியமாய் சம்பாஷித்துவிட்டு, அவருடைய தேச காரியதரிசியாகிய காஸ்பாரி கர்தினாலாண்டவரையுஞ் சந்தித்தார். அல்லாமலும் தாம் ரோமாபுரியில் தங்கியிருந்த மாளிகையில் ஓர் பெரிய விருந்து செய்து அதற்குச் சில கர்தினால்மார்களையும் வரவழைத்துத் தம்முடைய வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் அவர்களை அமரச்செய்து கௌரவப்படுத்தினர். நம்முடைய இராஜகுமாரர் ரோமாபுரிக்கு விஜயஞ்செய்ததின் முக்கிய காரணம் இத்தாலியா தேசத்து இராஜகுமாரத்தியை மணமுடித்துக் கொள்ள விருப்பங்கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவேயென்று பத்திரிகைகள் கூறுகின்றன.

2,100 ரூபாய் சாப்பிட்ட எருமை.—இராமநாதபுரஞ்ஜில்லாவைச்சார்ந்த மணியாரம்பட்டிக் கிராமத்திலுள்ள பந்தல்குடி ஊருணியில் குளிக்கப்போன இராம நாய்க்கரென்பவரொருவர் தமதிடமிருந்த 2,100 ரூபாய் பெறுமான செலாவணி நோட்டுகளை ஆலயிலையிற் சுற்றி ஊருணிக் கரைமேலிருந்த மரத்தடியில் வைத்துவிட்டு, குளித்துக்கொண்டிருக்கையில், அங்கு வந்த ஓர் எருமை, ஆலயிலைபொதிந்த அந்நோட்டுக்களை அப்படியே கவ்விமென்று தின்றுவிட்டதாம். எருமை அவைகளைத் தின்னதும் தின்னாததுமாயிருக்கிற வேளையில் கண்ட நாய்க்கர், அதைத் துரத்திப்பிடிப்பதற்குள்ளாக, அதுநோட்டுகளையெல்லாம் செவ்வையாய் விழுங்கி ஏப்பமிட்டுவிட்டதாம். என்னே பரிதாபம்!

நசரேத்து.—இப்போது பலஸ்தீனநாட்டில் யுத்தஞ்செய்யும் நமது பிரிடிஷ் இராணுவங்களுக்கு வெற்றிமேல்வெற்றி கிடைத்துக்கொண்டு வருகிறது. நமது மானுஷ்ய கடவுள் திருவவதாரமெடுத்துப் பிறந்து, வளர்ந்து, பாடுபட்டு மரித்தநாடானது துருக்கியரிடமிருந்து நமது காருண்ய பிரிடிஷ் அரசாட்சிக்குள் வருவது நமக்கு எவ்வளவு சந்தோஷமான காரியம். நமது இரட்சகர் ஊராகிய நசரேத்து நகரமானது சமீபத்தில் நம்மனோரால் பிடிபட்டுவிட்டது. இப்படியே பலஸ்தீனநாடு முழுவதும் நமது பிரிடிஷார் வசமாய் விடும்படி நசரேத்தூராராகிய நமது இரட்சகபெருமானை நாடி நாமெல்லாரும் நயந்து மன்றாடுவோமாக.

சமாதானத்துக்காக ஜெபதபம்.—நிகழும் யுத்தம் கூடிய சீக்கிரத்தில் முடிவாகி சமாதானமுண்டாகுமாறு ஜெபதபஞ் செய்யவேணுமென்று போர்புரியும் பிரதி தேசமும் தத்தம் பிரஜைகளுக்கு சுற்றுப்பத்திரம் அனுப்பி கேட்டுக்கொண்டிருக்க, பிரான்சு தேசமாத்திரம் இது விஷயத்தில் மௌனஞ் சாதிக்கிறது. அன்றியும் மி. ச. ஆசோன் கர்தினாலவர்கள் பிரான்சு தேசத்து பிரஜாதிபதிக்கு நிருபமொன்றெழுதி, அதில் மற்ற தேசங்களைப்போல் பிரான்சு தேசமும் இத்துன்பகாலத்தில் சர்வேசுரனை நோக்கிப் பிரார்த்திப்பது, அதன் க்ஷேமலாபத்துக்கு அவசியமென்று பிரேரேபித்ததற்கு, பிரஜாதிபதியின்முதல் மந்திரி ஷை கர்தினாலவர்களுடைய நல்ல பிரேரேபனையைப்பற்றி புகழ்ந்து பேசினரேயன்றி, அப்பிரேரேபனையை நிறைவேற்றுவது தேச சட்டத்துக்கு விரோதமாகுமென்று மறுமொழி யெழுதியனுப்பிவிட்டாராம். மற்றெல்லா தேசத்துக்குங் கடவுளிருக்க இவ்வொரு தேசத்துக்குமட்டும் கடவுளில்லைபோலும்!!

ஓர் அற்புதம்.—ஸ்டீபன் கான்ராய் எனும் ஓர் ஐரிஷ் கத்தோலிக்குப் போர்ச்சேவகன் சென்ற 30 வருடங்களாக ஆங்கிலேய படையிற் சேவித்துவந்தான். அவனுக்குப் பிராயம் தற்போது 54. இவன் சென்ற வருஷம் பிரான்சு தேசத்தில் தன் பட்டாளத்துடன் சேர்ந்து சண்டை செய்கையில், சட்டி பீரங்கி ஒன்று வெடிக்க, அதன் அதிர்ச்சியைத் தாளமுடியாமல் கீழேவிழுந்து 5-மணி நேரம் ஸ்மரணையற்றுக் கிடந்தான். பிறகு இவனுக்குப் புத்தித்தெளிவு உண்டானபோதிலும், முற்றிலும் குருடனும் செவிடனுமானான். ஆனதுபற்றி, இவன் டப்லின் நகரத்திலுள்ள ஒரு வைத்திசாலைக் கனுப்பப்பட்டு, அவ்விடத்தில் சிகிச்சை செய்யப்பெற்றுவந்தும், குணப்படவில்லை. அவ்விடத்தில் குழந்தை சேசுவின் சிறிய புஷ்பத்தைப்

பற்றிக் கேள்விப்பட்டு, அப்புண்ய கன்னிகையைக் குறித்து ஒரு நவநாள் கொண்டாடத் துவக்கினுன். நவநாளை முடித்த காலையில் விழித்தபடியே தன் கட்டிலில் படுத்திருக்கையில், வெண்பனிக்கட்டிக் கொப்ப தூய்மையான உடை தரித்து, தலையில் ரோஜா புஷ்பமுடி சூடி, கண்களைப் பறிக்கும் பிரகாசத்தோடு சௌந்திரவதியான ஒரு மாது அவனுக்குத் தரிசனையாகி "பக்தி விசுவாசத்துடன் வேண்டிக்கொள்" என்றாள். அந்நேரத்தில் ஒரு நர்சு தனக்கு அருந்தும்படி கொடுக்க அன்னபானுதிகளைக் கொண்டுவரக்கண்டு அவன் "ஓ! நர்சு, என் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிற சுந்தரமாதைப்பார்" என்றான். என்றவுடனே அவனுக்குண்டான தரிசனம் மறைந்துபோயிற்று. அவனுக்கும் முன்போல பார்வையும் கேள்வியுமுண்டாகி இன்னும் நல்ல சுகத்தோடிருக்கிறான். இவனுக்குச் சிகிச்சைசெய்து கொண்டுவந்த டாக்டர்கள் சடுதியில் இவனுக்குண்டான சௌக்கியத்தைப்பற்றி பிரமித்து அதிசயிக்கிறார்கள். இது நடந்தது சென்ற 1917ஹு ஆகஸ்டுமீ 27உ.

ஓர் ஆச்சரியமான காட்சி.—அமெரிக்காவைச் சேர்ந்த ஒண்டாரியோவென்னும் மாகாணத்திலுள்ள வின்சர் என்ற ஊரில் சென்ற மார்ச்சு மாதத்தில் கொழுந்துவிட்டு எரியும் ஓர் அக்கினிச் சக்கரத்தின் மத்தியில் ஓர் சம்மனசானவர் வானத்தில் தோன்றினதை அவ்வூர் போலீசு சேவகர் உட்பட பலர் கண்டதாக "நியூயார்க் வொர்ல்டு" என்னும் பத்திரிகைக்கு சமாசாரம் வந்ததாம். ஷெ யூரை யடுத்த "டிட்ராயிட்" என்னும் ஊரிலுள்ள குடிகளும் ஷெ அதிசயக் காட்சியைக் கண்டதாகச் சொல்லுகிறார்கள். அக்காட்சியைப் பற்றிய விவரங்கள் ஷெ இரண்டு ஊரார் சொல்லுவதும் ஒன்றுக்கொன்று பேதமில்லாமல் ஒத்திருக்கின்றனவாம்.

அர்மேனிய தேசத்தார்.—துருக்கியின் கொடுங்கோன்மைக் குள்ளாயிருந்த ஷெ தேசத்தார், வெகுபேர் நாவானுரைக்கப் படாத வாதைகளை யனுபவித்து நிஷ்டூரமாய்க் கொல்லப்பட்டார்கள். 24-ஆயிரம் பேரிருந்த ஒரு ஊரில் தற்போது 8-ஆயிரம்பேர் மாத்திர மிருக்கிறார்கள். ருஷியர் அத்தேசத்தைக் கைக்கொண்டபோது, காடுகளில் ஒளிந்திருந்த அர்மீனியர் மறுபடியும் தத்தம் இடங்களுக்கு வந்து சேர்ந்தார்கள். துலுக்கர் மறுபடியும் அர்மேனியாவைத் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டபின் அர்மேனிய குழந்தைகளை நிஷ்டூரமாயுபாதித்துக் கொன்றார்கள். ஸ்திரிகளை புகை வண்டி ஓடும் தண்டவாளங்களில் படுக்கவைத்து, அவர்கள்மேல் புகைவண்டியைவிட்டு சாகடித்தார்கள். அத்தேசத்து மேற்றிராணியாரைக் குரூரமாய்க் கொன்றார்கள். மரணதண்டனைக்குத் தப்பித்துக் கொண்டவர்களையாவது கொலைசெய்யாமல் காப்பாற்றும்படி அர்ச். பாப்பானவர் துர்க்கி சுல்தானுக்கு நிருபம் எழுதியிருக்கிறார்.

அகவிலைக் குறைவும் அதற்காகக் கொள்ளையும்.—ஐரோப்பா மகா யுத்தத்துக்கு வேண்டிய யுத்த தளவாடங்கள், சாமான்கள் முதலியவைகளை யனுப்புவதற்கு கப்பல்களையும் ரெயில்வண்டிகளையும் உபயோகப்படுத்திக்கொள்வதாலும், அதுகாரணமாய் அயல் நாட்டு சாமான்கள் தாராளமாய் வருவது தடைபட்டுப்போய்விட்டதாலும், உணவுப் பொருட்கள் உட்பட எல்லா சாமான்களின் விலையும் அபாரமாய் ஏறிவிட்டது. விசேஷமாய் உஜ்ஜீவிக்க உண்ணும் உணவுக்குவேண்டிய அரிசியின் விலையும், உடலை யுடுத்தவேண்டிய துணியின் விலையும் ஏழைகளால் தாங்கமுடியாத அளவுக்கு ஏறிவிட்டபடியால், சாமான்ய ஜனங்களெல்லோருக்கும் பெருங்கஷ்டமாய்விட்டது. இப்படியிருக்குங்கால், ரூபாய்க்கு 4-படி விற்றுக்கொண்டிருந்த அரிசி, ரூபாய்க்கு மூன்றரைப்படியென்றதும் ஜனங்கள் கோபாவேசங்கொண்டு கொள்ளையடிக்கப் புறப்பட்டார்கள். முதன் முதலில் விசாகப்பட்டணத்தில் கொள்ளையென்றார்கள். பிறகு கூடலூரில் கொள்ளையென்றார்கள். பிறகு செப்டம்பர்மீ 8உ ஞாயிற்றுக்கிழமை சென்னையில் கொள்ளையடித்துக் கலகம்பண்ணினார்கள். ஜனங்களுக்கும் போலீசுக்கும் நடந்த சச்சரவில், போலீசார் இரண்டு மூன்று பேருக்கும், ஜனங்களில் சிலருக்குங் காயம் நேரிட்டது. போலீசார் வேண்டுகோளின்படி அரிசி வர்த்தகர்கள் ஒரு சிறிது நேரம் ரூபாய்க்கு 5-படியும், 4½-படியும் போட்டார்கள். பிறகு போலீசார் போனபின்

பழயபடி 3½-படி, 4-படிதான் இன்றளவும் விற்றுக்கொண்டுவருகிறார்கள். சென்னையில் நடந்தவாறே, மதுரை, திருநெல்வேலி, திண்டுக்கல், குண்டூர், காஞ்சிபுரம், மாயவரம், நாக்ப்பட்டணம் முதலிய வெளியூர்களிலும் உணவுப் பொருட்களுக்காக கலகங்கள் நடந்தனவாம். அங்கங்கேயுள்ள உத்தியோகஸ்தர்களுடைய சமயோசித சாமர்த்தியத்தினால் கலகங்கள் பெருகாமல் தடைப்பட்டுவிட்டன. ஆனால், சென்னை மூர்மார்க்கட்டுக்கடுத்த குஜிலிக்கடைக் கட்டிடம் அக்கினிக் கிரையாக்கப்பட்டதுதான் மெத்த விசனத்துக்குரிய காரியம். அதனால் லட்சத்துக் கதிகமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அக்கட்டிடத்திற்கு தீமூட்டியவர்கள் இன்னாரென்று இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. சென்னையில் முனிசிபல் அதிகாரிகளாலும், சில பரோகார புருஷர்களாலும், ஏழைகளுக்கு சகாயமான விலைக்கு அரிசி முதலிய உணவுப் பொருட்கள் ஒருவாறு விற்கப்பட்டுவந்தாலும், ஏழைகள் கஷ்டம் நீங்கினபாடில்லை. வெளியூர்களினின்றும் உணவுப் பொருட்கள் அதிக தாராளமாய் வருவதற்கு இராஜாங்கத்தார் ரெயில்வே வசதி ஏற்பாடு செய்வதாலும், கிராமங்களில் நிலங்களைப் பயிர்செய்ய குறைந்த வரியில் ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடுத்து ஆதரிப்பதாலும் சாமான்ய ஜனங்களின் கஷ்டந்தீருமே யொழிய மற்றப்படியல்ல.

கின்மேர் (Guinemer).—நிகழும் பயங்கரத்துக்குரிய யுத்தத்தில் ஆகாய விமான படைகளாலுண்டாகும் உயிர்ச்சேதம் அதிகமாயிருக்கின்றது. இரு கட்சியாரும் தத்தம் விமானங்களை ஆகாயத்தில் பறக்கவிட்டு தத்தம் சத்துருக்களை மிக்க சாமர்த்தியமாய்த் தாக்கி போர்புரிகிறார்களாயினும், பிராஞ்சிய ஆகாயவிமான படையைச் சேர்ந்தவரும், சிறிது காலத்துக்குமுந்தி மரணமானவருமான கின்மேர் என்பவரே இப்போரில் வெகு பிரக்யாதி பெற்று விளங்கினவர். இவர் போர்புரிகையில் ஆகாயவிமானத்திலிருந்து கீழே விழுந்து இறந்தாரென்றும், இவருடைய சத்துருக்களான ஜெர்மனியர் இவர் படைத்திருந்த வீரசூரத்தைப்பற்றி மிக வாய்ச் சிலாகித்துப் பேசி, இவரை அடக்கஞ் செய்தார்களென்றும் நண்பர்கள் அறிவார்கள். கின்மேர் என்பவர் 23-பிராயமுள்ள வாலிபராயும், காச வியாதியால் பீடிக்கப்பெற்று அதிக மெலிவுற்ற தேகமுடையவராயுமிருந்தார். என்றாலும், ஐரோப்பா முழுதும் இவருடைய அரிதான வீரச்செயல்களைக் கேள்வியுற்று வியப்படையலாயிற்று. இவ்வீரசூரர் 64 தடவைகளில் சத்துருக்கள் விமானங்களை ஆகாயத்தில் தாக்கி வெற்றிகொண்டதுமன்றி, அநேக தருணங்களில் அவர்களுடைய ஆகாயக்கப்பல்களைக் கீழே விழத்தாட்டியுமிருக்கிறார். 7 விசை இவர் ஆகாயக்கப்பலிலிருந்து கீழேவிழநேரிட்டாலும், தம்முடைய திறமை சாமர்த்தியத்தினால் யாதொரு ஆபத்துமின்றி தப்பித்துக்கொண்டார். ஒரு தடவை இவர் 5,000 அடிக்கு மேல் ஆகாயத்திலிருந்த சமயத்தில், இவருடைய கப்பல் அகஸ்மாத்தாய் தீப்பற்றிக்கொள்ள, மரணபத்துக் குள்ளானாலும், தாம் செய்த சமர்த்தால தமக்கு அற்ப மோசமும வந்து நேராதபடி அற்புதமான விதமாய் கீழேவந்திறங்கினார். இவ்வளவு சாமர்த்தியம்படைத்த இந்த ஆகாயப் படை தளக்கர்த்தர் தமமுடைய அரிய செயல்களை யெல்லாம் தேவ உதவியைக் கொண்டே செய்ததாகச் சொல்லுவார். தம்மைப் பெருமிதப்படுத்தி புகழ்வோரிடமிருந்து விலகுவார். "இவ்வளவு வியப்புக்குரிய அரிய செயல்களை நீர் எப்படி செய்கிறீர்?" என்று கேட்போருக்குத் தாம் ஏழுதரம் ஆகாயவிமானத்திலிருந்து கீழேவிழுந்ததாகச் சொல்லுவார். கின்மேர் என்பவர் எப்படி வீரசூரத்தில் சிறந்து விளங்கினாரோ அப்படி புண்யத்திலும் சிறந்து விளங்கலானார். அவசரமான அலுவலுள்ள நாட்களில் தவிர மற்ற நாட்களிலெல்லாம் திவ்யபூசைக் காணத் தவறார். பூசைக்குப் போனால் கோவிலில் ஒரு மூலையில் முழங்காலிலிருந்து மகா பக்தி விசுவாசத்துடன் பூசை காண்பார். அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்யநன்மை வாங்குவார். பாவசங்கீர்த்தனஞ் செய்தானபின் தம்முடைய ஆத்தும குருவானவரிடத்தில் பெருந் தொகையான பணத்தைத் தந்து, அதை ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கச் சொலலுவார். இவருடைய வேலை மகா ஆபத்துக்குரிய வேலையாயிருந்

தபடியால், எப்போதும் பரிசுத்தமாய்ச் சீவித்து, மரணத்துக்கு ஆயத்தமாயிருப்பார். மரணத்தை நினைத்துக்கொள்ள அடிக்கடி தமக்குள் "இன்று உனக்கு, நாளைக்கு எனக்கு" என்பார். இவர் இளம்பிராயத்திலேயே தேவமாதாவின் சபையிற் சேர்ந்து மரணபரியந்தம் மாதாவின் பிரமாணிக்கமான பிள்ளையாய் நடந்துவந்தார். இப்படியாக இவர் வேதாபிமானமும் தேசாபிமானமுமுள்ளவராகச் சீவித்து, திருச்சபையின் மூத்த குமாரத்தியும், உலகத்தின் எத்திசையிலும் சத்திய வேதத்தைப் போதிக்க உதாரகுணத்துடன் தன் மக்களை யனுப்பிவரும் தாயுமான பிராஞ்சுமா தேசத்துக்காகத் தம் முயிரைக் கொடுத்து பாக்கியமான மரணத்தையடைந்தார்.

போர்த்துகல்தேசம்.—ஸ்பேயின் தேசத்திலிருந்த அர்ச். பாப்பானவருடைய ஸ்தானாதிபதி சமீபத்தில் போர்த்துகல் தேசத்துக்குப்போனபோது, அத்தேசத்திய பிரஜாதிபதியைச் சந்தித்தார். அப்போது பிரஜாதிபதி அவருக்கு நல்வரவுகூறி, மேரை மரியாதையாய் அவருடன் சம்பாஷித்து, சில நாட்களுக்குள் அர்ச். பாப்பானவருடைய ஸ்தானாதிபதி ஒருவர் போர்த்துகல் தேசத்துக்கும் நியமிக்கப்படுவாரென்றும், தாமும் ரோமாபுரிக்கு ஒரு மந்திரியை அனுப்பப்போவதாகவும் கூறினர். சமீபத்தில் கிடைத்த தந்தியினுல் ஷெ பிரஜாதிபதி சில வாரங்களுக்குமுன் தம்முடைய ஸ்தானாதிபதியை அர்ச். பாப்பானவரிடம் அனுப்பிவிட்டதாகத் தெரியவருகிறது.

கத்தோலிக்கு ஐக்கிய மெம்பர்கள்.—இவர்கள் ஆங்கிலேய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அநேக அநியாய சட்டங்களை ரத்துசெய்துவிடும்படி பார்லிமென்டில் முயற்சிசெய்துவருகிறார்கள்.

சீரிய மேற்றிராணிமார்கள்.—மலையாள தேசத்தில் 4-விக்காரியெட் அப்போஸ்தோலிக்ஸ்தானங்களுண்டென்றும் அவைகள் 4-சுதேச சீரிய மேற்றிராணிமார்களுடைய கண்காணிப்பி லிருக்கின்றனவென்றும் நண்பர்க ளறிவார்கள். இவர்களுக்குள் ஒருவர் அதிமேற்றிராணியாகப்போகிறாரென்று கேள்வி.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை

செக்கிந்திராபாத்

நமது அருமை நல்லாயனில் ஸ்ரீமான் பத்மநாயன் என்று அழைக்கப்படும் பாக்கியநாத பிள்ளை யவர்களின் தந்தையரும், காலஞ்சென்ற செக்கிந்திராபாத் (Trimulgherry) மெஸ்கண்டிராக்டரும் (Mess Contractor) திருமல்கிரி நாட்டாண்மையுமாகிய ஸ்ரீமான் சந்திரகாசம் பிள்ளை யவர்கள் மரணத்தையிட்டு அடியில் கண்ட நானும் வெகுவாய் துக்கிக்கிறேன். இவர் சில தினங்களாக சுரத்தால் பீடிக்கப்பட்டு குணப்படாமல், 1918-ஆம் ஆகஸ்டு மீ 15-ம் திகதி வியாழக்கிழமை காலை 8-மணிக்கு சாகுந்தருவாயில், கனம்தங்கிய குருப்பிரசாதியால், ஞான தீக்ஷைபெற்று, பிறகு மற்றுந் தேவத்திரவிய அனுமானங்கள் கொடுக்கப்பட்டு, தமது அருமை மக்கள், மருமக்கள், இனமித்திரர்கள் யாவரையும் துறந்து, சர்வேஸ்பரன் பதம் சேர்ந்தார். அன்றே மாலை 4-மணிக்கு சகல விசுவாசிகளும் சூழ, இவரின் பிரேதச் சேமாதிசடங்குகள் வீட்டிலும், கல்லறையிலும் நடத்தப்பட்டது. இவர் கடைசி சீவியகாலத்தில் சர்வேஸ்பரனுடைய மந்தையில் சேர்ந்து மரித்ததற்காகவும், இவரின் ஆத்தும நித்திய இளைப்பாறுதலுக்காகவும், இதை வாசிக்கும் அன்பர்கள் ஒரு பர., பிரி., வேண்டிக்கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Persian Gulf. A. பர்னபாஸ்,

சென்னை, வேப்பேரி.

23-வது பட்டாளத்து பென்ஷன் சிப்பாய், C. M. பாஸ்ட்டின் செல்வக்குமாரத்தியும், எனது அருமை மனைவியுமாகிய B. அந்தோனியம்மாள் என (விளக்கும் அம்மணியம்மாள்,) 1918 வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ம் திகதி, புதன்கிழமை மத்தியானம் ஏறக்குறைய 1-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தாள். இவளது பிரேதம் மறுநாள் காலை 9-மணிக்கு வண்ணாரப்பேட்டை ஞானப்பிரகாசியார் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவள் ஆத்துமத்துக்காக இதனை வாசிப்போர் 1-பர-1-பிரி வேண்டிக் கொள்ளக் கோருகிறேன்.

B. அந்தோனி பிள்ளை, மேய்ல் சார்ட்டர்,
ஆர். எம். எஸ். டி. டிவிஷன், எழும்பூர்.

புத்தக விளம்பரம்.

திருப்பாடுகளின் சரிதை :—(2-ம் பதிப்பு) இதில் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகள் சுருக்கமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இது நமதாண்டவருக்கு மரணத்தீர்வையிட்ட போஞ்சுபிலாத்தின் பெண்சாதியாலே எழுதப்பட்டதாம். இதனோடு போஞ்சுபிலாத்தின் சரித்திரமும், யூதாஸ்இஸ்காரியோத்தின் சரித்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது மெத்த அருமையான புத்தகம். விலை அணு 0—2—0.

மந்திர குறிப்பிடம்:—(3-ம் பதிப்பு) இச்சிறு புத்தகத்தில் எல்லா மந்திரங்களும், ஒவ்வொரு மந்திரத்துக்கும் படங்களுடன் தெளிவான அர்த்தங்களும், பிரதான ஜெபங்களும், சின்ன குறிப்பிடமும், பூசையுதவி மந்திரமும், கிறீஸ்துவ ஒழுக்க பொது அநுசரணை, பிரதிதின அநுசரணை, சுருக்கமான காலைச் செபம், மாலைச் செபம், தேவ இரகசியங்கள், படங்களுடன் ஜெபமாலை, அர்ச். தேவமாதா பிரார்த்தனை, கடைசி வேண்டுதல் முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன. இது புதுநன்மைவாங்கும் சிறுவர்களுக்கும், வாங்கினவர்களுக்கும் மெத்த பிரயோசனமான புத்தகம். இதை சிறுவர்களுக்கு அருமையான ஞானக்களஞ்சியமென்றே சொல்லவேண்டும். இப்புத்தகம் ஒவ்வொரு வாலிபர் கையிலு மிருக்கவேண்டியது. விலை அணு 0—2—6.

வேதாகம சரித்திரம் :—(3-ம் பதிப்பு) பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலுமுள்ள முக்கிய சரித்திரங்களும், ஆதாம் ஏவாள் படைக்கப்பட்டது முதல் ஆபிரகாம், ஈசாக்கு, மோசேஸ் முதலிய பிதாப்பிதாக்களுடைய சரித்திரங்களும், நம்முடைய திவ்ய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பிறந்து வளர்ந்தது, புதுமைகள் செய்தது, பாடுபட்டது முதலியவற்றைப்பற்றிய சரித்திரங்களும் இதில் சுருக்கமாய் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டு, 60-படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. சிறியோர்களாலும் பெரியோர்களாலும் ஒழிந்த நேரங்களில் ஞானவாசகமாக உபயோகிக்கக்கூடியது. இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய அருமையான புத்தகம். பள்ளிக்கூட மாணவர்கட்கு மெத்தவும் பிரயோசனமான புஸ்தகம். விலை அணு 0—12—0.

எமது விலாசம் :— மானேஜர்,
"நல்ல ஆயன்" ஆபீஸ்,
பிராட்வே, மதராஸ்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,148—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,508	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (செப்டெம்பர்மீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,538	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுகிரோன்மணிகளைப்பற்றிய இச் சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணுக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12-அணு; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

ஓர் வேண்டுகோள்.

அர்ச். அடைக்கலமாதா கோவில் கட்டிட தருமம்.



1900ஆம் சேலம் ஜில்லா கிறிஷ்ணகிரி தாலூக்கா, எலத்தகிரி கிராமத்தில், அர்ச். அடைக்கலமாதா பேரால் ஷி கோவில் கட்டத் துவக்கி, பணக் குறைவால் இன்னும் முடிவுபெறுமலிருக்கின்றது. இன்னுஞ் சுமார் 4,000 ரூ தேவை. அவ்வாண்டவளுடைய பக்தர்கள் செய்யும் பொருளுதவி வீண்போகாது. அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் அவ்வாண்டவள் தம்முடைய அடைக்கலத்தில் வைத்து பாதுகாப்பாள். எவ்வளவு சொல்ப தருமமும்; எம்மாலியன்ற நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளப்படும்.

எமது விலாசம்:—

யேஸ். டாமினிக் சுவாமியார், எலத்தகிரி, வரட்டனபல்லி போஸ்ட்,
கிறிஷ்ணகிரி தாலூக்கா.

விளம்பரம்.

ST. ANN'S ORPHANAGE RAFFLE.

புத்தகத்துக்கு முந்துங்கள்.

தர்ம விஷயமாக 4-அணு செலவழிப்பதால்
ஏழைகளாகிவிடமாட்டீர்கள்.
டிக்கட்டு ஒன்று அணு நாலுதான்.

200-பிரைசுகள்.

ரூ 1000த்திலிருந்து ரூ 5 வரை இருக்கிறது. 22 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் ரூ 5/— (ஒரு புஸ்தகம் விற்றால் 2 இனும் டிக்கட்டும் 2 புஸ்தகம் விற்றனுப்பினால் 4 இனும் டிக்கட்டும் ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும்.)

THE CATHOLIC MALE ORPHANAGE RAFFLE.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!
டிக்கட்டு ஒரே ரூபாய்.

பிரைசுகள் 200.

ரூ 4000த்திலிருந்து ரூ 5 வரை இருக்கிறது. 11 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் ஒன்று ரூ 10/— (ஒரு புஸ்தகத்துக்கு ஒரு டிக்கட்டு இனும்.)

சகல மூல வியாதிக்கும் மோதிரம்.

1 விலை ரூ	1	0	0	6 விலை ரூ	5	6	0
3 விலை ரூ	2	12	0	12 விலை ரூ	10	4	0

எல்லோரும் அவசியம் வாசிக்கவேண்டிய புஸ்தகம் "லீலியும் ரோசாவும்" விலை அணு 12. வேண்டியவர்கள் எழுதவும்.

G. சவரிமுத்துப் பிள்ளை,
சாத்தூர், இராமநாதபுரம் (ஜில்லா.)

LAGHIAM DEPOT.

No. 44, Namboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும்,
தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஒடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசி யில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத வாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்தநரம்புகளையு மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை, யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களை விட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துற்பலமே ஏற்படாது, இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாவார்கள். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித போய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தம்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே எஜண்டாயி நாடுவார்கள். இது உண்மை. அப்படி எஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏக காலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுதமுடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.
போஸ்டேஜ் அணா 4.

ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

ஏமது விலாசம்:—

லேகியம் டிபோ,
நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை,
மதராஸ்.



விநோதம்.

காற்றடைக்கும் தலையணை: இதிலிருக்கும் குழாயிலுள்ள திருகாணியைக் கழற்றி, வேண்டிய அளவிற்குக் காற்றை யடைத்துத் திருகாணியை முன்போல் திருகிவிட்டால் மிக்க ஆரோக்கியமான தலையணையாயுதவும். பிறகு திருகாணியைக் கழற்றிக் காற்று வெளிவந்தபின் திருகிவிட்டு மடித்து ஜோப்பில் வைத்துக்கொள்ளலாம். இது சிரநோயுள்ளவர்களுக்கும், பிரயாணிகளுக்கும் சாதாரணமாய் யாவருக்குமே மிக்க பிரயோஜனமானது. தலையணை 1-க்கு அணா 8.

தபாற்கூலி பிரத்தியேகம்.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
சௌக்கார்பேட்டை, சென்னை.